
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 182 | வெள்ளிக்கிழமை 27 மே 2022 | வைகாசி 13 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை : ரூ. 50




# சர்வதேச நாணய நிதியம் உதவினால் மட்டுமே மீட்சி!

## பிரதமருக்கு இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டு

## ஏற்றுமதி சார்ந்த கொள்கைகளை முடிவுகளை எடுக்க பிரதமர் பணிப்பு



கொழும்பு, மே 27

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்படும்வரையில் நாட்டில் பொருளாதார நெருக்கடிகளுக்கு உறுதியான தீர்வைக் காண்பது கடினம் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. 15 ➤

## இன்று முதல் மீள இயங்கும் சபுகஸ்கந்த

கொழும்பு, மே 27

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் இயங்க ஆரம்பமாகின்றன.

மசகு எண்ணெய் இறக்குமதி தடைப்பட்டதை அடுத்து கடந்த மார்ச் மாதம் 20ஆம் 15 ➤

## எரிபொருள் வழங்குவதற்கு விரைவில் பங்கீட்டு அட்டை

### மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை விநியோகிப்பதற்கு விரைவில் பங்கீட்டு அட்டை அறிமுகப்படுத்தப்படும் என்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார். 15 ➤

## யாழில் எரிவாயு விநியோகத்துக்கு இராணுவப் பாதுகாப்பு பெறப்படாது

### மாவட்டச் செயலர் மகேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிவாயு விநியோகத்துக்கு இராணுவ உதவிகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக 15 ➤

## கச்சதீவை மீட்பதற்கு தக்கதருணம் இதுவே

### மோடியின் முன்பாக ஸ்டாலின் உரை

சென்னை, மே 27

தமிழக மீனவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில், கச்சதீவை மீட்பதற்கு இதுவே உகந்த தருணம் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கச்சதீவை, நீண்ட காலக் குத்தகைக்கு 15 ➤

## நேற்று இன்று 1,32,000 லீற்றர்

### சீராகின்றது பெற்றோல் நெருக்கடி

யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாவட்டத்துக்கு நேற்று ஒரு லட்சத்து 32 ஆயிரம்லீற்றர்பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது. இன்றும் ஒரு லட்சத்து 32 ஆயிரம் லீற்றர் பெற்றோல் 15 ➤



## பதவி விலகுகிறார் சவேந்திர சில்வா!

கொழும்பு, மே 27

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் பதவி விலகவுள்ளார் என்று இலங்கை இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது. 15 ➤

## விபத்தில் சிக்கிய இளைஞர் மரணம்

கிளிநொச்சி, மே 27

இலுப்பைக்கடவை, வெள்ளாங்குளம் பகுதியில் நடந்த விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். மற்றொருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வெள்ளாங்குளத்தைச் சேர்ந்த கோபிராஜ் (வயது-22) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பய 15 ➤

## 33 ஆயிரம் லீற்றர் ம.எண்ணெய் மீனவருக்கு வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 33 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் நேற்றுமுன்தினம் கிடைத்துள்ளதாகவும் அதனை மீனவர்களுக்கு பகிர்ந்து வழங்கு 15 ➤

## அரச ஊழியர்கள் சம்பளம் பட்ஜெட்டின் பின் உயரும்?

கொழும்பு, மே 27

நிவாரண வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று தெரியவருகின்றது.

அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுகளுக்கு ஏற்ப, அரச 15 ➤

## சுகாதாரப் பணியாளர்களின் சம்பளம் குறைக்கப்படாது

### பணிப்புறக்கணிப்பு ஒத்திவைக்கப்பட்டதாக மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, மே 27

மருத்துவர்கள் உட்பட சுகாதாரப் பணியாளர்களின் சம்பளம் எந்தக் காரணத்தைக் கொண்டும் குறைக்கப்படாது. அதேநேரம் அவர்களது சம்பளத்தில் வெட்டப்பட்ட தொகை இன்னும் இரு வாரங்களில் மீளளிக்கப்படும் - இவ்வாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அமைச்சின் செயலர் ஸ்ரீவர்தன ஆகியோர் உறுதியளித்துள்ளதால் பணிப்புறக் 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணெண்ணெய்

# தென்னிலங்கை மீனவருக்கு விநியோகம் முல்லை. மீனவர்கள் நேற்று போராட்டம்

**முல்லைத்தீவு, மே 27**

**மண்ணெண்ணெய் இன்றி எமது அன்றாட வாழ்வாதாரத்தை இழந்துவருகிறோம் எனத் தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களால் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.**



முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்திலிருந்து நேற்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள அலுவலகம் ஊடாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம்வரை சென்றடைந்தது. பின்னர் மாவட்ட செயலகம் முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மாவட்டச் செயலர் க.விமலநாதன் போராட்டத்தில் ஈடுபட்ட கடற்றொழிலாளர்களை உள்ளே அழைத்து அவர்களின் கோரிக்கைகள் அடங்கிய மனுவை ஏற்றுக்கொண்டார். அந்த மனுவில்,

தென்னிலங்கையிலிருந்து வருகைதந்து தொழில்புரியும் மீனவர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப் படுகிறது. எரிபொருள் நிலையங்களுக்கு வரும் எரிபொருளானது எமது மாவட்ட மீனவர்களுக்குப் போதுமானதாக இல்லை.

கடந்த 8ஆம் திகதியிலிருந்து இங்குள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மண்ணெண்ணெய் வரவில்லை. இதனால் எமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொருள்களின் விலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையால் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளோம்.

எமது நிலையை கருத்திற்கொண்டு தொழில்புரிவதற்கு மண்ணெண்ணெயைப் பெற்றுத்தருமாறு முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் அமைப்பு சார்பாக கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்டச் செயலர் கடற்றொழிலாளர்களிடம் தெரிவிக்கையில்,

அனைத்து மாவட்டங்களிலும் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு தொடர்ச்சியாக நிலவுகிறது. இதன்காரணமாக மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் விவசாய உற்பத்தி வீதமும் குறைவடைந்துள்ளது என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின்போது தெரியப்படுத்தினோம்.

மேலும் எரிபொருள் விநியோகம் செய்யும் பிராந்திய முகாமையாளருடனும் கதைத்துள்ளோம். இன்று மண்ணெண்ணெய் அனுப்புவதாக அவர்கள் உறுதிமொழி தந்துள்ளனர். உங்களின் இந்த மனு கடற்றொழில் அமைச்சுக்கும் எரிபொருள் அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்படும் - என்றார். (ச-19)

## பேக்கரி உற்பத்திகளின் விற்பனை பெரும் வீழ்ச்சி

கொழும்பு,மே 27

அண்மைக்காலமாக பேக்கரி உற்பத்திப்பொருள்களின் விற்பனை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது. கோதுமை மா, சமையல் எரிவாயு மற்றும் உணவுப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக விற்பனை குறைந்துள்ளது என்று தெரிவிக்கப் படுகின்றது.

பேக்கரி பொருள்களின் விலை உயர்வு, பேக்கரி பொருள்களுக்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்களின் விலை உயர்வு போன்ற காரணங்களால் கடந்த சில மாதங்களாக விற்பனை சரிந்துள்ளது என்று பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-இ)

## எரிபொருள் இல்லாமையால் எரிவாயு விநியோகம் நிறுத்தம்

கொழும்பு,மே 27

3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் சமையல் எரிவாயு சிலிண்டர்களுடன் நாட்டை வந்தடையவிருந்த கப்பலுக்கு எரிபொருள் இல்லாததால் குறித்த கப்பல் நாட்டை வந்தடையத் தாமதமாகும். இதனால் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இன்றும் விநியோகிக்கப்படமாட்டாது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

7 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய இரு கப்பல்கள் நேற்றும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் நாட்டை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே நேற்று வந்தடையவிருந்த கப்பலுக்கு எரிபொருள் வழங்க முடியாததால் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக அந்தக் கப்பல் இந்தியாவுக்குச் சென்றுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனால் குறித்த எரிவாயுக் கப்பல் இலங்கையை வந்தடைய மேலும் இரண்டு நாள்களாகும். எனவே, எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்காக வரிசைகளில் காத்திருப்பதைத் தவிர்க்குமாறு லிட்ரோ நிறுவனம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (க-14-இ)

## சிற்றுண்டிகளின் விலை மீண்டும் அதிகரித்தது

கொழும்பு, மே 27

கொழும்பு உட்பட நாட்டின் பிரதான நகரங்களில் உள்ள அனைத்து சிற்றுணவகங்களிலும் சிற்றுண்டிகளின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் எரிவாயு நெருக்கடியின் காரணமாகவே விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சிற்றுணவக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முட்டை ரொட்டி, தோசை 100 ரூபாவாகவும் பரோட்டா 50 ரூபாவாகவும் முட்டை ரொட்டி கறி 150 ரூபாவாகவும், 3 பரோட்டா கறி 200 ரூபாவாகவும், அரைபாண்கறி 170 ரூபாவாகவும் அப்பம் 50 ரூபாவாகவும், முட்டை அப்பம் 100 ரூபாவாகவும் அதிகரிக்கப் பட்டுள்ளது. இதேவேளை தேநீர் 50 ரூபாவாகவும், பால்தேநீர் 100 ரூபாவாகவும் அதிகரித்துள்ளன.

அத்துடன் றோல், பற்றிஸ், மரக்கறி ரொட்டி, முட்டை பணிஸ் உள்ளிட்ட சிற்றுண்டிகளின் விலை 100 ரூபா வரையிலும் அதிகரிக்க சிற்றுணவக உரிமையாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஒ-14-இ)



பிரதமர் தலைமையில்

## ‘21’ தொடர்பில் இன்று பேச்சு!

கொழும்பு, மே 27

பிரதமர் ரணில் தலைமையில், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளின் பங்கேற்புடன் 21ஆவது திருத்தம் தொடர்பில் இன்று கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளது.

இன்று இடம்பெறும் இந்தக் கலந்துரையாடலின்போது கட்சித் தலைவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் அடுத்த வாரம் இடம்பெறும் அமைச்சரவைக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ தெரிவித்தார். (ம)

## மக்கள் விரும்பின் மஹிந்த வருவார்!

பெரமுன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 27

மக்கள் கோரிக்கை விடுத்தால், மஹிந்த ராஜபக்ச மீண்டும் வருவார் எனப் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டீ.பி.ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச தோல்வியடைந்தார்.

எனினும், மக்கள் அவரை மீள அழைத்தனர். அவரும் வந்து, ஆட்சியைப் பிடித்தார். எனவே, மக்கள் கோரினால் அவர் மீண்டும் வருவார்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டில்தான் பெரமுன தற்போது உள்ளது. தற்போதையசூழ்நிலையில் இணைந்து பயணிப்பதுதான் சிறப்பு - என்றார். (ம)

## மே 9 வன்முறை விவகாரம்: மஹிந்தவிடம் வாக்குமூலம்

கொழும்பு,மே 27

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் குற்றப்புலனாய்வுத் துறையினர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி அலரிமாளிகையில் மஹிந்த ராஜபக்சவைச் சந்தித்த பின்னர், பொதுஜன பெரமுன குண்டர்கள் நிகழ்த்திய கொலைவெறித் தாக்குதலால் தென்பகுதியில் பெரும் கலவரம் வெடித்தது.

இதனால் மக்கள் ஒன்றுதிரண்டு, பொதுஜன பெரமுன அரசியல்வாதிகளின் சொத்துக்களைச் சேதமாக்கினர். வன்முறையில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கொல்லப்பட்டார். சுமார் 10 வரையான பொதுமக்களும் உயிரிழந்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில், குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். அதனடிப்படையில் மஹிந்த ராஜபக்சவிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (க-இ)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அனைத்து வர்த்தகங்களும் அடுத்த மாதத்தில் முடங்கும்

**கொழும்பு,மே 27**

**அடுத்த மாதத்தில் அனைத்து வர்த்தக நடவடிக்கைகளும் வீழ்ச்சியடையும் அபாயத்தில் உள்ளன என்று இலங்கை ஐக்கிய வர்த்தக மன்றம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் சங்கத்தின் தலைவர் டானியா அபயசுந்தர தெரிவிக்கையில்,
தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து இனி தொழில்களை நடத்த முடியாது. இதுவரை காலமும் சேமிப்பிலேயே தொழில்களை நடத்தி வந்தோம். எனினும், தொடர்வதும் நடத்துவதும் மிகவும் கடினம். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு பணம் அச்சடிக்கப்படுகின்றது. ஆனால் தனியார் துறை ஊழியர்களுக்கு என்ன பதில்?- என்றார். (க-இ)



## பரீட்சையில் ஆள்மாறாட்டம்; இருவருக்கு விளக்கமறியல்!

கொழும்பு,மே 27
க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்ட இருவருக்கு இரண்டு நாள்கள் விளக்கமறியல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.
அம்பாறை, கல்முனை வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலையில் தனிப்பட்ட பரீட்சார்த்தி ஒருவருக்குப் பதிலாக அவரது சகோதரன் சமய பாட பரீட்சையை எழுதியதுடன் தனது அடையாள அட்டையின் ஒளிப்படத்தையும் மாற்றியுள்ளமை தெரியவந்தது.
பரீட்சார்த்திக்குப் பதிலாக ஒரே முகத்தோற்றமுடைய 28 வயதான சகோதரனே இவ்வாறு பரீட்சை எழுதிச் சிக்கினார்.
சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்து கல்முனை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே அவர்களுக்கு இரண்டு நாள்கள் விளக்கமறியல் பிறப்பிக்கப்பட்டது. (ஒ-14,இ)

## 6 நாள்களுக்குள் லாப்ஸ் எரிவாயு விநியோகம்

கொழும்பு, மே 27
எதிர்வரும் 6 நாள்களுக்குள் எரிவாயு விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக லாப்ஸ் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. கடந்த சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னரான காலப்பகுதி முதல் லாப்ஸ் எரிவாயு விநியோகம் இடைநிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-14-இ)





## தொலைந்த கைப்பை உரியவரிடம் ஒப்படைப்பு

சாவகச்சேரி, மே 27
சாவகச்சேரி மருத்துவமனையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்துக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட கைப்பை ஒன்று மருத்துவமனை பொலிஸார் ஊடாக உரியவரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.
60ஆயிரம் ரூபா மற்றும் முக்கியமான ஆவணங்கள் அடங்கிய குறித்த கைப்பையை கடமையிலிருந்த பாதுகாப்பு ஊழியர் ஒருவர் கண்டெடுத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.
இந்த நிலையில் தவறவிட்டவர் அப்பகுதியில் தேடியலைந்து பொலிஸாரிடம் சென்றபோது அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு உறுதிப்படுத்திய நிலையில் அவரிடம் குறித்த கைப்பை ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-9)

## இனந்தெரியாதோரால் கல்வி நிலையம் சேதம்

கிளிநொச்சி, மே 27
கிளிநொச்சியிலுள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றை இனந்தெரியாதோர் சேதமாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
வகுப்பறைக் கூரைத் தகரங்கள், மேசைகள், கதிரைகள் ஆகியவற்றை அடித்து உடைத்து சேதமாக்கிவிட்டு அங்குள்ள சில பொருள்களை சூறையாடியும் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் கல்வி நிலைய நிர்வாகத்தினரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. . (ச-21)



## ஜே.சி.பி.யில் டீசல் திருட்டு

சாவகச்சேரி, மே 27
கல் உடைக்கும் ஆலையில் விடப்பட்டிருந்த ஜே.சி.பி.வாகனம் ஒன்றின் தாங்கியிலிருந்து டீசல் திருடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
குறித்த வாகனத்தில் 85 லீற்றர் டீசல் நிரப்பப்பட்டு ஆலை வளாகத்தில் விடப்பட்டிருந்தது.
மறுநாள் காலை தாங்கியைப் பார்த்தபோது தாங்கியிலிருந்த அனைத்து டீசலும் இணைப்பு வயரை வெட்டி திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.
இதனையடுத்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ச-9)




கோத்தாவுக்கும் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவுக்கும் இடையில 'லடாய்' எண்டு கிட்டடியில பட்சி சொன்னது இப்ப உறுதியாகிட்டுது. இந்த மாதத்தோட சவேந்திரா இராணுவத்தளபதி பதவியில இருந்து விலத்துறார். வழக்கமா இப்பிடியான நெருக்கடி நேரத்தில, இராணுவத் தளபதிகள் ஓய்வுபெற்றால் அவைக்கு இன்னும் ஒரு வருசமோ இல்லாட்டி இரண்டு வருசமோ பதவி நீடிப்பை ஜனாதிபதிமார் குடுப்பினம். ஆனால், அப்பிடி ஒரு பதவி நீடிப்பை இந்தமுறை சவேந்திராவுக்கு கோத்தாபய குடுக்கேலை.. போனால் போகட்டும் எண்ட மனநிலையில அவர் இருக்கிறாராம். சவேந்திராவுக்கும் கோத்தா தனக்கு பதவி நீடிப்புத் தரமாட்டார் எண்டு நல்லாவே தெரிஞ்சிருக்கு.

கோத்தாவுக்கும் சவேந்திராவுக்கும் இடையில இருக்கிறது இண்டைக்கு நேற்றைக்கு பழக்கமில்லை. ஜே.பி.வி. கிளர்ச்சிக்காலத்தில இருந்தே பழக்கம். அப்ப கோத்தாவின்ர கீழ்நிலை அதிகாரியா சவேந்திரா இருந்தார். இவை ரண்டு பேரும் ஜே.வி.பி.எண்ட பேரில கனக்க சிங்களப் பெடியளைப் பிடிச்சு,அவையை இல்லாமலாக்கினவை எண்டு இப்பவும் அங்கத்தைச் சனம் சொல்லும். அந்தப் படுகொலைப் பழக்கம், முள்ளிவாய்க்காலிலையும் தொடர்ந்திச்சு. என்னதான் சண்டை நடக்கேக்க பொன்சேகா இராணுவத்தளபதியா இருந்தாலும், கோத்தாபய தான் நினைச்ச சில வேலையளை சவேந்திரா சில்வாவைக் கொண்டுதான் செய்விச்சவர். அதுவும் பொன்சேகாவுக்கு சொல்லாமலே கோத்தாவும், சவேந்திராவும் கூட்டணி போட்டுச் செய்த வேலையள்தான் வெள்ளைக்கொடியோட வந்தவையை போட்டுத் தள்ளினதும், பாலச்சந்திரனுக்கு பிஸ்கட் குடுத்திட்டு சுட்டுக் கொலை செய்ததும். இதை மாதிரி நிறைய அநியாயங்களை ரண்டு பேரும் கூட்டாச் செய்த விசயம் ஆமியில இருக்கிற எல்லாருக்கும் பிறகு தெரிய வந்திட்டுது. அதாலதான் அவரை கொஞ்சநாள் இராஜதந்திரப் பதவியைக் குடுத்து, வெளிநாடுகளில சுத்த விட்டிட்டு, நேரம் பார்த்து ஆளை இராணுவத் தளபதியாக்கினவராம் கோத்தா.

ஆனால், இப்பிடி ரத்தமும் கொலையுமா ஒண்டாச் சேர்ந்திருந்த ரண்டு பேருக்குள்ளயும் கொஞ்சநாளா கடும் கொளுவல். கொரோனா மூண்டாவது அலையில ஆமிக்காரர் ஒழுங்கா நடவடிக்கை எடுக்கேலை எண்டும், சவேந்திரா சரியான முடிவுகளை எடுக்காமல் எல்லாத்தையும் கெடுத்திட்டார் எண்டும் கோத்தாவுக்கு சிலர் போட்டுக் குடுத்திருக்கினம். அதுக்குப் பிறகுதான் ரண்டு பேருக்கும் முட்டுப்பாடாம். பார்லிமெண்டுக்கு முன்னால வந்த பீல்ட் பைக்காரருக்கு பொலிஸ் அடிச்சதுக்கும் கோத்தா ஒரு நடவடிக்கையும் எடுக்கேலை எண்டதும் சவேந்திராவுக்கு ஆத்திரம். அதுக்கெல்லாம் சேர்த்துவைச்சுத்தான் மே 9 ஆம் திகதி கலவரம் நடக்கேக்க ஆமியை அவர் களத்தில இறக்காமல் கோத்தாவுக்கு விளையாட்டுக் காட்டியிருக்கிறார். இப்ப என்னெண்டால், பதவி நீடிப்புக் குடுக்காமல் சவேந்திராவுக்கு கோத்தா விளையாட்டுக் காட்டிட்டார் பாருங்கோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே 9 வன்முறைகளின் பின்னணி:

# தேசபந்து தென்னக்கோனை ஏன் இடமாற்றவில்லை? விளக்கமளிக்க பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்பு



**கொழும்பு,மே 27**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக அமைதிப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 'மைனா கோ கம', 'கோத்தா கோ கம' போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய விவகாரத்தில், மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை இடமாற்றம் செய்யாமை தொடர்பில் நீதிமன்றுக்கு விளக்கமளிக்குமாறு, பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு கோட்டை நீதிமன்றம் உத்தரவிட்டது.**

'மைனா கோ கம', 'கோத்தா கோ கம' மீதான தாக்குதல்கள் குறித்த வழக்கு விசாரணை கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**சட்டத்தரணிகள் முன்னிலை**

சி.ஐ.டியின் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் சானக டி சில்வா தலைமையிலான குழுவினர் மன்றில் விசாரணையாளர்கள் சார்பில் முன்னிலையாகினர். அவர்களுக்காக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் அய்ஷா ஜினசேன தலைமையில் சிரேஷ்ட பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் டிலான் ரத்னாயக்க, சொலிஸிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம, சிரேஷ்ட அரச சட்டவாதி உதார கருணாதிலக, சஜித் பண்டார ஆகியோர் முன்னிலையாகினர். சந்தேகநபர்களுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி.சில்வா, சட்டத்தரணி சானக அபேவிக்ரம, ஜயந்த டயஸ் நாணயக்கார உள்ளிட்டோர் முன்னிலையாகினர். வழக்கை மேற்பார்வை செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, அது தொடர்பில் அச்சங்கத்தின் பிரதித்தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட முன்னிலையாகினார். அவர் அந்தப் பணிக்கு மேலதிகமாக வன்முறையாளர்களால் தாக்குதலுக்குள்ளான இரு அருட்தந்தையர்கள் தொடர்பிலும் மன்றில் முன்னிலையாகினார். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஜனாதிபதி சட்டத்தரணிகளான ரியன்சி அர்சகுலரத்ன, சரத் ஜயமான்ன, உபுல் ஜயசூரிய, மைத்ரி குணரத்ன, சட்டத்தரணி சுரேன் பெரேரா உள்ளிட்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

**விடயங்கள் முன்வைப்பு**

வழக்கு விசாரணைகள் ஆரம்பித்ததும் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் அய்ஷா ஜினசேன மன்றுக்கு விடயங்களை முன்வைத்தார். பிரதானமாக 3 விடயங்களை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை அடையாளம் காண 48 சாட்சியாளர்களின் பட்டியல் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் அல்லது அத்துமீறல்கள் காரணமாகக் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 76. அவர்களில் பிரதானமாகக் காயமடைந்த 3 பேரை விசேடமாகக் குறிப்பிட வேண்டும். சாலிக அனுரங்க எனும் நபர் தலையில் தாக்கப்பட்டுள்ள நிலையில், தற்போதும் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார். இந்துனில் செனரத் பண்டார எனும் அமைதிப்போராட்டக்காரர் மீது மரக்கதிரையொன்றால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், அத்தாக்குதலை நடத்தும்போது அருகிலிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக 'அவனை அங்கே கொன்றுபோடுங்கள்' எனக் கூக்குரலிட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பிரியங்க விஷ்வ எனும் நபரும் இரும்புப்பொல்லால் தலையில் தாக்கப்பட்டுள்ளதுடன் கீழே விழுந்தவுடன் குழுவாகச் சேர்ந்து அவரைத் தாக்கியுள்ளனர்.

**454 பேரிடம் வாக்குமூலம்**

இந்த விசாரணைகளில் இதுவரை 454 வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அலரிமாளிகைக் கூட்டத்தில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், அறிவிப்பாளர்கள், 13 இராணுவத்தினர், 10 கடற்படையினர், பொலிஸ்மா அதிபர், இரு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், 194 சிவிலியன்கள் என அந்தப் பட்டியல் நீண்டது. சேதமாக்கப்பட்ட அமைதி ஆர்ப்பாட்டக்காரர்களின் சொத்துக்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்ள அரச பெறுமதி மதிப்பீட்டாளரின் உதவி பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விசேடமாக இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து சிறைக்கைதிகள் அதற்குப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகம் எழுப்பப்பட்டிருந்தது. அதுகுறித்த விசாரணையில் இதுவரையான நிலவரங்களின் பிரகாரம் வட்டரக்க சிறைச்சாலையின் சிறைக்கைதிகள் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

**உளவுத்தகவல் பகிர்வு**

கடந்த 8 ஆம் திகதி பொலிஸ்மா அதிபருக்கு உளவுத்துறையினர் ஒரு தகவலை அளித்துள்ளனர். அதாவது 9 ஆம் திகதி பொதுஜன பெரமுன் ஆதரவாளர்கள் அலரிமாளிகையில் ஒன்றுகூடுவது தொடர்பில் அந்த உளவுத்தகவல் பகிரப்பட்டுள்ளது. அவ்வாறு கிடைக்கப் பெற்ற உளவுத்தகவல், பொலிஸ்மா அதிபரால் மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் எவ்வாறு அன்றைய தினம் செயற்படவேண்டும் என்பது தொடர்பில் தெளிவான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. உரிய பாதுகாப்பு உத்திகளைக் கையாளுமாறும், பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதைத் தடுக்குமாறும் எழுத்துமூலம் விரிவாக பொலிஸ்மா அதிபரால் ஆலோசனை சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**3 கோரிக்கைகள்**

இந்தத் தாக்குதல் தொடர்பில் பெருமளவானவர்கள் தொடர்புபட்ட நிலையில், மன்றில் முன்வைக்கப்படும் இறுவட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள காட்சிகளில் இருப்போரை 'தனிநபர் முகங்களை அடையாளம் காணல்' எனும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அடையாளம் காட்ட அரச இரசாயனப்பகுப்பாய்வாளரின் டிஜிட்டல் பகுப்பாய்வுப் பிரிவுக்கு உத்தரவிடுமாறு கோருகின்றேன். (நீதிவான் அதற்கு உத்தரவளித்தார்) அதே நேரம், அலரிமாளிகையில் குறித்த தினம், அறிவிப்புக்களைச் செய்த இரு அறிவிப்பாளர்களை குரல் சோதனைக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. அவர்களில் ஒருவர் அறிவிப்புச் செய்யும்போது, காலிமுகத்திடலை நோக்கி அங்கிருந்தவர்களை வன்முறையின் பால் தூண்டும் ஒலிப்பதிவுகள் கிடைத்துள்ளன. வசந்த குமார, லலித் மதுமான்ன ஆகியோரே அறிவிப்புக்களைச் செய்துள்ள நிலையில், அவர்களில் யாரின் குரல் அது எனக் கண்டறிய, அரச இரசாயன பகுப்பாய்வாளர் ஊடாக பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்கு உத்தரவிடவும் ( உத்தரவு வழங்கப்பட்டது) அத்துடன் அலரி மாளிகைக் கூட்டம் தொடர்பில் ஒளிப்பதிவுகள் செய்யப்பட்டிருப்பின் அதனைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு, பொதுஜன பெரமுனவின் ஊடக பணிப்பாளருக்கு உத்தரவிடவும் (அவ்வுத்தரவும் வழங்கப்பட்டது).

**தேசபந்துவை கைது செய்யாதது ஏன்?**

இதனையடுத்து நீதிமன்றில் பாதிக்கப்பட்ட தரப்பின் ஜனாதிபதி சட்டத்தரணிகளான ரியன்சி அர்சகுலரத்ன, சரத் ஜயமான்ன, மைத்திரி குணரத்ன உள்ளிட்டோர் விசேட வாதங்களை முன் வைத்தனர். அவர்கள் மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரைக் கைது செய்யாமை தொடர்பில் கேள்வி எழுப்பினர். சாட்சியங்கள் மிகத் தெளிவாக உள்ளதாகவும், பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 77, 78 ஆம் அத்தியாயங்களின் கீழும் குற்றவியல் சட்டத்தின் 107 ஆம் பிரிவின் கீழும் தேசபந்து குற்றமிழைத்துள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன குறிப்பிட்டார். குற்றவியல் சட்டத்தின் 32 ஆம் அத்தியாயத்தின் கீழ் தேசபந்துவை கைது செய்ய போதுமான சான்றுகள் இருப்பதாக ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்சகுலரத்ன குறிப்பிட்டார்.

இந்த நிலையில் சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் அய்ஷா ஜினசேன கடந்த 16, 22 ஆம் திகதிகளில் சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைகளில் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் செயற்பட தெளிவான நிலைப்பாட்டை அறிவித்துள்ளதாகவும், அவரை மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து மாற்றுமாறு கடந்த 23 ஆம் திகதி சட்டமா அதிபர் பொலிஸ் மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். இதன்போது பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணிகள், சட்ட மா அதிபரின் ஆலோசனைகளை தேசபந்து தென்னக்கோன் விடயத்தில் சி.ஐ.டி.யினரோ, பொலிஸ் மா அதிபரோ செயற்படுத்தவில்லை என்பதைச் சுட்டிக்கட்டினர். இதனையடுத்தே பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவைப் பிறப்பித்த நீதிவான், தேசபந்து தென்னக்கோனை இடமாற்றம் செய்யாமைக்கான காரணத்தை அடுத்த தவணை மன்றுக்குக் கூறவேண்டும் என உத்தரவிட்டார். எதிர்வரும் வாரத்தில் சி.ஐ.டி.யினர் உரியவாறு செயற்படாவிட்டால், நீதிமன்றம் சாட்சிகளை வைத்து உத்தரவொன்றைப் பிறப்பிக்க வேண்டி வரும் எனவும், இதுவரையில் நீதிமன்றின் முன்னால் உள்ள சாட்சிகள் பிரகாரம், தேசபந்து தென்னகோன் வன்முறையைக் கட்டுப்படுத்த முயலவில்லை என்பதும், வன்முறையாளர்களுடன் சேர்ந்து செயற்பட்டுள்ளார் என்பதும் தெளிவாவதாக அறிவித்தார். (க-இ)

# மே 9 கலவரத்தில் கைதான உறுப்பினர்களுக்கு மறியல்

மே 9 ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்தில் கைதான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த, மிலன் ஜயதிலக்க, டான் பிரியசாத் ஆகியோரை எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதே வேளை - மேலும் ஆறு சந்தேகநபர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு அடையாள அணிவகுப்பில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர். (ஒ-14,இ)

*சிறுபோகம் நிறைவுபெறாவிடின்*

# உணவுத்தட்டுப்பாடு உக்கிரமடையும்

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் சிறுபோகச் செய்கை நடவடிக்கைகள் நிறைவுபெறாவிடின், நாட்டில் உணவுத் தட்டுப்பாடு உக்கிரமடையும் என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப்பிரிவு பணிப்பாளர் டி.அபேசிறிவர்தன தெரிவித்தார். சிறுபோகத்துக்குத் தேவையான நடவடிக்கைகள் சில மாவட்டங்களில் தாமதமாகியுள்ளது. இந்த நிலையில் தற்போது நெற்செய்கையை செய்யமுடியாது போனால் மாற்றுப் பயிர்களைப் பயிரிடுமாறு விவசாயிகளிடம் டி.அபேசிறிவர்தன கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-14,இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சர்வதேச நாணய நிதியத்தால்

## கடனை மறுசீரமைக்கும்படி முன்னரேயே கோரப்பட்டது

*வெளிப்படுத்தினார் நந்தலால் வீரசிங்க*

கொழும்பு, மே 27



இலங்கையின் கடன் நிலை பேறான நிலையில் இல்லை என்றும், அது விரைவில் சீரமைக்கப்படவேண்டும் என்றும் 2020ஆம் ஆண்டிலேயே சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியது என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

மத்திய வங்கி தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராய்வதற்காக மத்திய வங்கி நேற்றுமுன்தினம் கோப் குழுவின் முன் அழைக்கப்பட்டிருந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்ததார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக கடன் உதவியைப் பெறுவதற்கு 2020ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, இலங்கையின் கடன் நிலைபேறான நிலையில் இல்லை என்பது அவர்களினால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது. எனவே கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதாயின் கடன் மறுசீரமைப்புக்குச் செல்லவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இதற்கமைய நிதிச் சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட தொழில்நுட்பக் கலந்துரையாடல்களின் பின்னர் மத்திய வங்கியின் நாணயச் சபையின் ஊடாக நிதி அமைச்சர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு கலந்துரையாடல்களின் அடிப்படையிலான பரிந்துரைகள் அனுப்பப்பட்டன. நிதி அமைச்சு உள்ளிட்ட அமைச்சரவையின் ஊடாகவே அது தொடர்பான அடுத்தகட்டத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன - என்றார்.

எனினும் இது தொடர்பில் அப்போதைய நிதி அமைச்சர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாடாளுமன்றத்துக்கு எந்தவொரு விடயத்தையும் அறிவிக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். (ம-இ)

ஏன் வங்குரோத்து நிலை?

# கடமை தவறியோரை கண்டறிய விசாரணை

கோப் குழு பரிந்துரை

**கொழும்பு, மே 27**



**நாடு பொருளாதார நெருக்கடிக்குச் செல்லும்வரை தமது பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறிய நபர்கள் குறித்து விசாரணை செய்வதற்கு நாடாளுமன்ற சிறப்புக்குழு அமைக்கப்பட வேண்டும் என்று கோப் குழு பரிந்துரைத்துள்ளது.**

மத்திய வங்கி தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராய்வதற்காக மத்திய வங்கி நேற்றுமுன்தினம் கோப் குழுவின் முன் அழைக்கப்பட்டிருந்தபோதே கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் இந்தப் பரிந்துரையை வழங்கினார்.

நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் மற்றும் இந்த நிலைக்குச் செல்லத் தமது கடமைகளை நிறைவேற்றத் தவறிய நபர்கள் குறித்து விசாரணை செய்வதற்கு நாடாளுமன்ற சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும். பொருளாதாரத்தை வழிநடத்திய ஒரு சிலரின் தீர்மானங்கள் காரணமாக முழு நாடும் இன்று பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. இதனைக் குற்றமாகக் கருதி விரைவில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-இ)

## அடுத்த 3 மாதங்கள் மிகுந்த சவாலானவை

*மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு*

கொழும்பு, மே 27

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கு முன்னர், அடுத்துவரும் மூன்று மாதங்கள் மிகுந்த சவாலானவை என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார்.

கோப் குழுவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும்வரையான பயணத்தில் எதிர்வரும் 3-4 மாதகாலத்துக்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்வது சிக்கலானதாக இருந்தாலும் இந்தச் சவாலை வெற்றிகொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (ம-இ)

## மத்திய வங்கிக்கு கூடுதல் அதிகாரம்

கோப் குழு பரிந்துரை

கொழும்பு, மே 27

வெளித்தரப்பினரின் செல்வாக்கு இன்றி துல்லியமான தொழிநுட்ப காரணிகளின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் மத்திய வங்கிக்கு வழங்கப்படவேண்டும் என்று கோப் குழு வலியுறுத்தியுள்ளது.

கோப் குழுவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிதிக்கட்டமைப்புச்சார் கலந்துரையாடலின்போது, கடந்த காலத்தில் நாணயமாற்று வீதத்தை மிதக்கவிடாது தக்கவைத்துக் கொண்டமையால் பெருமளவு தொகை இழக்கப்பட்டுள்ளது என்று சமூகத்தில் நிலவும் கருத்துத் தொடர்பிலும் குழு வினவியது.

இது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் உரிமை நாணயச் சபைக்கே இருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார். இதையடுத்தே, வெளித்தரப்பினரின் செல்வாக்கு இன்றி துல்லியமான தொழிநுட்ப காரணிகளின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தை மத்திய வங்கிக்கு வழங்க வேண்டியதன் அவசியத்தை கோப் குழு வலியுறுத்தியது. (ம-இ)



## ரூ. 600 பில்லியன் வரி ஏன் குறைக்கப்பட்டது?

*வரிக்குறைப்பால் சீரழிவு என ஹர்ஷ டி சில்வா ஆவேசம்*

கொழும்பு, மே 27

இலங்கையின் வரி வருமானம் குறைக்கப்படக் கூடாது என்று சர்வதேச நாணய நிதியம் ஆலோசனை வழங்கியிருந்த நிலையில், எந்த அடிப்படையில் 600 பில்லியன் ரூபா வரிக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டது என்று கேள்வி எழுப்பினார் கலாநிதி ஹர்ஷ டி சில்வா.

கோப் குழுவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிதிக்கட்டமைப்புச் சார் கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2019ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சர்வதேச நாணய நிதிய அறிக்கைக்கு அமைய இலங்கையின் கடன் நிலைபேறான நிலையில் காணப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் சில மாதங்கள் கழித்து வெளியிடப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கைக்கு அமைய இலங்கையின் கடன் நிலைபேறானது அல்ல என்பது சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. வரி வருமானம் குறைக்கப்படக் கூடாது என சர்வதேச நாணய நிதியம் ஆலோசனை வழங்கியிருந்த நிலையில் ஜனாதிபதியின் அப்போதைய செயலரால் 600 பில்லியன் ரூபா வரியைக் குறைப்பதற்கான தீர்மானம் எவ்வாறு எடுக்கப்பட்டது? - என்றார்.


புதிய தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் வீரசேகர சுட்டிக்காட்டினார். (ம-இ)

அரச துறைகளில்

## மூன்று வார திட்டத்துக்கு அமைவாக தேவையானோரை மட்டும் அழைக்குக

கோப் குழு பரிந்துரைத்தது

கொழும்பு, மே 27



அரச துறைகளில் மூன்று வாரத் திட்டங்களை வகுத்து, தேவையானோரை மட்டும் பணிக்கு அழைக்கவேண்டும் என்று கோப் குழு நிதி அமைச்சுக்குப் பரிந்துரைத்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை, எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் அரசாங்க சேவையில் உள்ளவர்களைக் குறைந்தளவு பயன்படுத்தி பணிகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும். இதற்காக பொது நிர்வாக அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி, எதிர்வரும் மூன்று வாரங்களில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வேலைத்திட்டத்தை உடனடியாகத் தயாரிக்கவேண்டும் என்றும் கோப் குழு மேலும் அறிவுறுத்தியுள்ளது.

இதன்போது, நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்குஎடுத்த முயற்சிகளுக்காக நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோரை பாராட்டினார். (ம-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு உறுதிப்படுத்தாவிடின் எரிபொருள் விநியோகம் நிறுத்தம்

## பவுஸர் உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு, மே 27**

**எரிபொருள் பவுஸர் சாரதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாவிட்டால், முன்னறிவிப்பின்றி எரிபொருள் விநியோகச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படும் என்று இலங்கை தனியார் எரிபொருள் பவுஸர் உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் இணைச் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்த தாவது, சாரதிகளின் பாதுகாப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், எரிபொருள் பெற்றுக் கொள்ளும் போது பொது மக்களால் பல குழப்பங்களும் முரண்பாடுகளும் தொடர்ச்சியாகப் பதிவாகி வருகின்றன. பவுஸர் சாரதிகளுக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரி பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எரிபொருள் விநியோகத்தை அத்தியாவசிய சேவையாகக் கருதி, தற்போது நடைபெற்று வரும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையைக் கருத்திற்கொண்டு சாரதிகள் தொடர்ந்தும் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

எனினும் மக்களின் குழப்பங்களையும் முரண்பாடுகளையும் பாதுகாப்பு படையினர் கட்டுப்படுத்தத் தவறினால், எரிபொருள் விநியோகச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படும் - என்றார். (ஓ-14-இ)

# பரீட்சை முடிவடைந்தவுடன் பேருந்துகள் இயங்காது

## தனியார் பேருந்துச் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, மே 27

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர், பேருந்துச் சேவையில் இருந்து விலகுவதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களின் ஊழியர்கள் பேருந்து ஒன்றுக்கு 100 லீற்றர் எரிபொருள் வழங்குவதற்கு ஆயிரம் ரூபா கப்பம் கோருவதன் காரணமாக, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முறையாக டீசல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், சாதாரண தரப் பரீட்சைக்குப் பின்னர் பேருந்துச் சேவையில் இருந்து விலகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (க-இ)

# எம்.பி.யின் பாதுகாவலர் கொலை; சந்தேகநபர் துப்பாக்கியுடன் கைது

கொழும்பு, மே 27

பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் தனிப்பட்ட பாதுகாவலரான பொலிஸ் சார்ஜன்ட், சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் பொலிஸ் சார்ஜன்டின் கைத்துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின் போது, சந்தேகநபர் நாடாளுமன்ற உறுப்பினரைத் தாக்கியதுடன், அவரது பாதுகாவலர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காணொலிகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவும், பாதுகாப்பு உத்தியோகத்தரும் வாகனத்தில் பயணித்த போது, சந்தேகநபர்கள் நிட்டம்புவப் பிரதேசத்தில் வாகனத்தை நிறுத்தியுள்ளனர்.

முன்னாள் பிரதமருக்கு ஆதரவாக அலரிமாளிகைக்குச் சென்றதாகக் கூறி, அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். அதில் இருவரும் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 12 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

# 10 மற்றும் 15 வயது பிள்ளைகளுடன் தந்தையும் நீரில் மூழ்கி உயிரிழப்பு

கொழும்பு, மே 27

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் மஹியங்கனை ஹபரவெவ கிரிமெடில்ல தம்பராவ ஏரியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் இரு மகன்கள் ஆகியோரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நீராடச் சென்றவர்கள் வீடு திரும்பாததையடுத்து, உறவினர்கள் ஏரிக்குச் சென்றுள்ளனர். அங்கு அவர்களது உடைகள் மற்றும் காலணிகள் மட்டும் கரையில் காணப்பட்டன.

தேடுதலில் மூவரும் மீட்கப்பட்டு மஹியங்கனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும் அவர்கள் ஏற்கனவே உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. தந்தை (வயது 45) மற்றும் 15, 10 வயதுகளையுடைய இரண்டு மகன்களும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)

# நாமலுக்கு எதிரான வழக்கு: செப்ரெம்பர் 21 விசாரணை

கொழும்பு, மே 27

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உள்ளிட்டோருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கோட்டை நீதிவான் திலின கமகே அறிவித்துள்ளார்.

ரக்பி விளையாட்டை மேம்படுத்த கிரிஷ் நிறுவனம் கொடுத்ததாகக் கூறப்படும் 70 மில்லியன் ரூபாவை தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நாமல் ராஜபக்சவும் மன்றில் முன்னிலையாகியிருந்தார். இந்த விவகாரம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மன்றில் தெரிவித்தது. இதனையடுத்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கிரிஷ் குழுமத்திடம் பணம் பெற்று அதனைத் தவறாகப் பயன்படுத்திய விவகாரம் தொடர்பில், நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக, இடம்பெற்ற விசாரணைகளில் கைது செய்யப்பட்ட நாமல் ராஜபக்ச, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)

# நாட்டின் பொருளாதார மீட்சிக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்

## ஜனாதிபதி விசேட கவனம்

கொழும்பு, மே 27

நாட்டில் நிலவுகின்ற பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொள்ளும் வகையில், அந்நியச் செலாவணி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சுட்டிக் காட்டினார்.

திறமையான பணியாளர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தைகளுக்கு உள்ளீர்க்கும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பான ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



பல்வேறு துறைகளில் திறமையான தொழிலாளர்களுக்கு ஜப்பான், போலந்து மற்றும் ருமேனியா உள்ளிட்ட நாடுகளில் பல்வேறு வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் உள்ளன. அந்த வாய்ப்புகளை இலக்காகக் கொண்டு மொழி மற்றும் தொழில் பயிற்சி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். திறமையான பணியாளர்களை உருவாக்குவதன் மூலம், உயர் ஊதியம் பெறும் தொழில்களுக்கான வாய்ப்புகளை அதிகளவில் பெற்றுக் கொள்ள முடியும்.

ஐரோப்பா உட்பட பல நாடுகளில் தாதியர்சேவைகளுக்கு அதிக தேவையுள்ளது. ஜப்பானில் மட்டும் முதியோர் பராமரிப்பு மற்றும் உணவு விநியோகம் சார் துறையில் 3 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் உள்ளன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகம் சுட்டிக்காட்டுகின்றது. அதற்கு ஜப்பானிய மொழி அறிவு கட்டாயம்.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில்பயிற்சிஅதிகாரசபை, தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகம் உள்ளிட்ட அரச மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்புடன் ஜப்பானிய மொழி அறிவைப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போது அரசாங்க சேவையில் உள்ள எந்தவொரு நபரும் அல்லது பல்நோக்கு வேலைத் திட்டத்தின் கீழ் ஆள்சேர்ப்பு செய்யப்பட்ட ஒரு ஊழியர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்வதற்கு உள்ள தடைகளை நீக்குவது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அதில் சிரேஷ்டத்துவத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார தெரிவித்தார்.

வெளிநாட்டுப் பணப்பரிமாற்றலுக்காக வாகன அனுமதிப்பத்திரம், வீட்டுக் கடன்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களை ஊக்குவிக்க முடியும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தூதரகங்களின் பங்களிப்புடன் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அமைச்சர் தெரிவித்தார் -என்றுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பதுக்கலாலேயே பற்றாக்குறை!

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 2ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சுமார் 16 லட்சம் லீற்றருக்கும் மேற்பட்ட பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது என்று பெற்றோலியத் துறைசார் தகவல்கள் வெளிப்படுத்தியுள்ளன. அதைவிட ஒவ்வொரு நாளும் சராசரியாக ஒரு லட்சத்து 32 ஆயிரம் லீற்றர் பெற்றோல் குடாநாட்டுக்கு விநியோகிக்கப்படுகின்றது என்றும் இந்தத் தொகை சாதாரண நாள்களை விட இருமடங்கு அதிகம் என்றும் அந்தத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

பெற்றோலின் விலை, வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் 420 ரூபாவாக அதிகரித்துள்ள போதிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகள் ஓய்ந்தபாடில்லை. நீயா,நானா என்று கங்கணம் கட்டிக்கொண்டு பெற்றோலை நிரப்புவதற்காக அனைத்துத் தரப்பினரும் காத்துக் கிடக்கின்றனர். வாழ்க்கைச் செலவு அதிபயங்கரமாக அதிகரித்து, பொருண்மியச் சிக்கல்கள் குருவியின் தலையில் வைக்கப்பட்ட பனங்காய் போன்று அழுத்திக்கொண்டிருக்கின்ற போதிலும் பெற்றோலின் மீது எம்மவர்களுக்கு இருக்கும் தீராக்காதல் எந்நிலை வரினும் தொடரவே செய்கின்றது.

பெற்றோலின் இந்த அதீத கொள்வனவுக்குப் பின்னால் பல கேள்விகளுக்கு நாம் பதில் தேடவேண்டியுள்ளது. பெற்றோல் அனைவருக்கும் கிடைக்க வேண்டும், சீரான பகிர்வை உறுதிப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் ஒருவர் இத்தனை ரூபாவுக்கு மட்டுமே பெற்றோலை நிரப்ப முடியும் என்ற வரையறை முன்வைக்கப்பட்டது. ஆனால், அந்த 'வரையறை விதிமுறை'யின் முழுப்பயன் அனைவரையும் சென்றடைந்ததா? என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில். பெற்றோலை நிரப்பிச் செல்லும் நபர்கள் தமது மோட்டார் சைக்கிள்களில் இருந்தோ அல்லது இதர வாகனங்களில் இருந்தோ வெற்றுக்கொள்கலன்களில் பெற்றோலை மீண்டும் நிரப்பி தமது வீடுகளில் சேமித்து வைத்துவிட்டு மீண்டும் மீண்டும் தமது தேவைக்கும் அதிகமான நுகர்வில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றமை ஒன்றும் பரம இரகசியம் அல்ல.

இந்தப் பதுக்கல்கள்தான் இன்று பெற்றோலுக்கு என்றுமே இல்லாத அளவுக்கு இமாலயக் கேள்வியை உருவாக்கியுள்ளது. இந்தப் பதுக்கல்கள்தான் தினமும் சுமார் ஒரு லட்சத்து 32 ஆயிரம் லீற்றர் பெற்றோல் குடாநாட்டுக்கு விநியோகிக்கப்பட்ட போதிலும் இன்னமும் வரிசைகளில் பலர் காத்துக்கிடக்கக் காரணமாகியிருக்கின்றது.

உண்மையில் இதுவொரு செயற்கைத் தட்டுப்பாடு. எந்தத் துறையிலும் ஊழல் மாபியாக்கள் தலையெடுக்க 'செயற்கைத் தட்டுப்பாடுகளே' முதன்மைக் காரணம். அந்தவகையில் இப்போது பெற்றோலை மையமாக வைத்து ஊழல் மாபியாக்கள் குடாநாட்டில் தீவிரமாகத் தோன்றியுள்ளமையை எவராலும் மறுத்துரைக்க முடியாது. வரிசையில் நின்று பெற்றோலை நிரப்பிக்கொள்ள முடியாத நபர்கள் இந்த ஊழல் மாபியாக்களால் இலக்குவைக்கப்படுகின்றனர். 420 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்ட பெற்றோல் கறுப்புச் சந்தையில் இன்று 600 ரூபாவரை விற்கப்படுகின்றது.

நாடு சுமுகமான நிலையில் இருந்தபோது குடாநாட்டுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பெற்றோலை விடவும் இருமடங்கு பெற்றோல் தற்போது பகிர்ந்தளிக்கப்படுகின்றது. அனைவருக்கும் பெற்றோலை கிடைக்கச் செய்வதற்காக கொள்வன்வு வரையறை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், பெற்றோலுக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடே நிலவுகின்றது. எனின், இந்தத் தட்டுப்பாடுகளுக்கு யார் காரணம்? அரசாங்கமா?

எல்லாவற்றுக்கும் பொத்தம்பொதுவாக அரசாங்கத்தை குறைகூறுவதைப்போன்று இந்த செயற்கைத் தட்டுப்பாடுகளுக்கும் அரசாங்கத்தை நோக்கி விரல்களை நீட்டிவிட்டு நகர்ந்து செல்ல முடியாது. நாடு எப்பாடுபட்டாலும் பரவாயில்லை, எவர் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, நான் தப்பினால்போதும் என்ற குறுகிய - குரூர மனப்பான்மையின் விளைவுதான் இது. இதை நாம்தான் சரிசெய்ய வேண்டும். இங்கு 'நாம்' என்று கு[illegible] ஒவ்வொருவரினதும் தனிமனிதில் ஏற்படும் [illegible] மாற முயற்சிப்போமா?

## நாளொரு நல்வார்த்தை

"தவறு நேர்ந்துவிடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்தச் செயலையும் செய்யாமல் பின்வாங்குவது இழிவானது" - ஹென்றிஃபோர்ட்




# தொடரும் மருந்துத் தட்டுப்பாடு: மருத்துவமனைகளுக்கு நெருக்கடி

## மருந்தாளர் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு,மே 27**

**நாட்டில் சிறுநீரகம் மற்றும் புற்றுநோயாளிகளுக்குத் தேவையான பல மருந்துகளுக்கு தட்டுப்பாடு நீடிப்பதால், மருத்துவமனைகள் எதிர்காலத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளன என்று அரசாங்க மருந்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் அஜித் திலகரத்ன தெரிவிக்கையில்;

மருந்துகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டால், நோயாளிகள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். மருந்து கட்டும் துண்டு அல்லது பிளாஸ்டர் கூட மருத்துவமனைகளில் காணமுடியாத நிலை எதிர்காலத்தில் உருவாகும். சிறுநீரக நோயாளிகளுக்கு இரத்த சிவப்பணுக்களை அதிகரிக்கப் பயன்படுத்தப்படும் மருந்துகளின் கையிருப்புக் குறைந்து வருகின்றது. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நபர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான மருந்துகளும் தீர்ந்துவிட்டன. அத்தியாவசிய மருந்துகள் தட்டுப்பாடு காரணமாக சிகிச்சையை ஆரம்பித்த நோயாளர்கள் மிகவும் அவல நிலையை எதிர்நோக்கியுள்ளனர். இருதய நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும் பல மருந்துகளின் இருப்புக்கள் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்குத் தேவையான கரையக்கூடிய இன்சுலின் இருப்புக்கள் தற்போது தீர்ந்து வருகின்றன. இது தொடர்பில் அரசாங்க மருந்தாளர் சங்கம், ஜனாதிபதி, முன்னாள் பிரதமர், முன்னாள் நிதியமைச்சர், சுகாதார அமைச்சு உள்ளிட்ட அதிகாரிகளுக்கு முன்னரே அறிவித்திருந்தும் கவனம் செலுத்தப்படவில்லை. துரித நடவடிக்கை எடுக்கத் தவறியதன் விளைவாக நோயாளிகள் கடுமையான சுமைகளை எதிர்கொள்கின்றனர். இதனால் முழு சுகாதாரத்துறையும் வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது - என்றார். (சு-இ)

# நாட்டில் மருந்துப் பற்றாக்குறைக்கு அந்நியச் செலாவணியே காரணம்

## மருந்துகள் ஒழுங்குமுறை அதிகார சபை விளக்கம்

கொழும்பு,மே 27

நாட்டில் மருந்துகள் பற்றாக்குறை ஏற்பட அந்நியச் செலாவணி நெருக்கடியே காரணம் என்று தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகார சபை தெரிவித்துள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் அடங்கிய குழுவினருடனான கலந்துரையாடலின்போது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு விளக்கமளித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மருந்துகளின் தரத்தை மதிப்பிட்டு நாட்டுக்கு வழங்கப்பட்ட மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை தாமதமின்றி விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மருந்துகள் மற்றும் உபகரணங்களை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தில் தனிப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களில் 150 வகையான மருந்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளன-என்றுள்ளது. (சு-இ)

நாளை
28.05.2022
சனிக்கிழமை
வைகாசி 14

சுபநேரம் : 02.52 - 04.22
ராகுகாலம்: 08.52 - 10.22
அக்கினி நாள் முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















# டயலொக் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் 4ஜி வலையமைப்பை விரிவாக்குகிறது




யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் இணைப்பை மேம்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டுக்கு இணங்க, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி யாழ்ப்பாண மாநகர சபையின் அனுமதியுடன் MultiPurpose Smart Lamp Poles களை நிறுவுவதன் மூலம் 4ஜி வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளை ஆரம்பித்துள்ளது.

டயலொக் 2002ஆம் ஆண்டு முதல் வட பிராந்தியத்தில் தொடர்ந்து சேவையை முன்னெடுத்து வருகின்ற அதேநேரத்தில் நாட்டின் கையடக்கத் தொலைபேசி உட்கட்டமைப்பை அதன் உலகளாவிய சேவை வழங்குநர்களுக்கு இணையான நிலைக்கு உயர்த்தியும் உள்ளது. 2018ஆம் ஆண்டு முதல், இலங்கை முழுவதும் அதிக பாவனையாளர்கள் உள்ள பகுதிகளில் MultiPurpose Smart Lamp Poles களை நடைமுறைப்படுத்த டயலொக் எடோட்கோ சர்வீசஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் (Edotco Service Lanka (Pvt) Limited) உடன் இணைந்து செயற்பட்டு வருகிறது. மேலும், இலங்கை முழுவதும் உள்ள கிராமப்புற மக்களுக்கு வலையமைப்பை மேம்படுத்துவதற்காக இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 'கிராமத்துக்கு தொடர்பு' (Gamata Sanniwedanai) (GS) முயற்சியுடன் டயலொக் கூட்டிணைந்துள்ளது.

இன்றுவரையில் GS முன்முயற்சியின் கீழ் 2 மாவட்டங்களில் 19 தொலைத்தொடர்பு கோபுரங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அடுத்த சில மாதங்களில் இந்தத் திட்டத்தின் ஊடாக 10 மாவட்டங்களில் மேலும் 164 தொலைத்தொடர்பு கோபுரங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் தொழில்நுட்ப முன்மொழிவு பற்றிய பொது மக்களின் குழப்பங்களை நிவர்த்தி செய்யும் முகமாக 2021ஆம் ஆண்டு முதலாம் திகதி மாநகரசபை முதல்வர், ஆணையாளர், பிரதம பொறியலாளர் மற்றும் கௌரவ சபை உறுப்பினர்களுக்கு டயலொக் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் தொழில்நுட்ப உயர்முகாமைத்துவ குழுவினால் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டு அதன் பின்னர் செய்து கொள்ளப்பட்ட 2ஜி-4ஜி தொழில்நுட்பங்களுக்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில் இதற்கான தீர்வு எட்டப்பட்டது. மேலும் எதிர்காலத்தில் குறித்த smart pole களில் கொண்டுவரப்படும் எந்தவொரு புதிய தொழில்நுட்பமும் யாழ். மாநகர சபையின் முன் அனுமதியைப் பெற்ற பின்னரே அவை செயற்படுத்தப்படும் எனும் அடிப்படையில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் கருத்துத் தெரிவிக்கையில், "டயலொக் நிறுவனம் எமது சமூகத்துடன் நீண்டகால உறவைக் கொண்டுள்ளது என்பது அனைவரும் அறிந்த விடயம். டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இன் குழுமத் தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் குழுமத் தலைமை தொழில்நுட்ப அதிகாரி ஆகியோர் எங்களின் அழைப்பை ஏற்று அவர்களின் திட்டங்களை எங்களிடம் விவாதித்து விளக்கியதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மேலும் MultiPurpose Smart Lamp Poles களுக்குப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் குறித்தும் டயலொக் நிறுவனம் தெளிவுபடுத்தி விளக்கியது. மேலும், இந்தக் கலந்துரையாடலின் மூலம் 5ஜி தவிர்ந்த 2ஜ-4ஜி தொழில்நுட்பங்களை மட்டுமே பயன்படுத்துவதற்கான உடன்படிக்கைக்கு வந்துள்ளதுடன் எமது சமூகத்தினருக்கு அவற்றின் நன்மைகளையும் ஏனைய சமீபத்திய தொழில்நுட்பங்களைத் தொடர்ந்து ஆராய்ந்து வழங்குவோம் எனத் தெரிவித்தார்.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ கருத்துத் தெரிவிக்கையில், 'யாழ் பிராந்தியத்தில் எம்மால் மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளும் எமது வாடிக்கையாளர்களுக்கான துரித 4ஜி வலையமைப்பை வழங்குவதற்காகவே இடம்பெறுகிறது என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறோம்.

4ஜி வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கான இந்த நோக்கத்துக்கு அமைய, .இலங்கை முழுவதும் இதுவரை 500 இடங்களில் smart lamp poles அமைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 9 மாகாணங்களில் தொடர்ந்து விரிவாக்கங்களை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய வழமைக்கு அமைவாக எமது வாடிக்கையாளர்களின் வீட்டிலிருந்தான வேலை மற்றும் கற்றல் முயற்சிகளுக்கு நாம் என்றும் அர்ப்பணிப்புடன் எம்மாலான ஆதரவைத் தொடர்ந்து வழங்குவோம்- என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முயற்சியில் தடைகளை சந்திப்பீர்கள். அலைச்சல் அதிகரிக்கும் நாள். குடும்பத்தினரால் செலவு அதிகரிக்கும். எதிர்ப்பாலினர் நட்பில் எச்சரிக்கை தேவை.

**இடபம்:** முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். பணவரவு திருப்தி தரும். செல்வாக்கு உயரும். இழுபறியாக இருந்த செயல் நிறைவேறும். அலுவலகத்தில் செல்வாக்கு உயரும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். அரசு வழியில் நன்மை கூடும். வழக்கு சாதகமாகும். முயற்சி வெற்றியாகும். தொழிலில் போட்டியாளர்கள் விலகுவார்கள்.

**கடகம்:** செயலில் இழுபறி இருக்கும். உறவுகளால் உதவி கிடைக்கும். தொழிலில் திருப்பம் உருவாகும். புதிய முயற்சி மேற்கொள்வீர்கள். திறமை வெளிப்படும் நாள்.

**சிம்மம்:** எதிரிகளால் சங்கடங்களை சந்திப்பீர்கள். எதிர்பார்த்தவற்றில் இழுபறியான நிலை நீடிக்கும். மனதில் பயம் வந்துபோகும். பதற்றப்படாமல் செயற்படுவதால் நன்மை உண்டு.

**கன்னி:** விலகிச் சென்றவர்கள் தேடி வருவர். செல்வாக்கு உயரும். அரசு வகையில் நன்மை உண்டு. உங்களுடைய முயற்சி வெற்றி பெறும். ஆதாயம் காண்பீர்கள்.

**துலாம்:** முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிரி தொல்லைகள் விலகும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். நீண்டநாள் விருப்பம் நிறைவறும். எதிர்ப்புகள் விலகும்.

**விருச்சிகம்:** பணவிஷயத்தில் இழுபறியைச் சந்திப்பீர்கள். உறவினர்களால் சங்கடத்துக்கு ஆளாகலாம். நினைத்தது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும். வழக்கு விவகாரத்தில் இழுபறி நீடிக்கும்.

**தனுசு:** தேவையற்ற பயம் வந்து போகும். அரசு வழியில் கூடுதல் கவனம் தேவை. பொறுமை அவசியம். சந்தோஷத்துக்காகப் பணம் செலவழிப்பீர்கள். விருப்பம் நிறைவேறும்.

**மகரம்:** இழுபறியாக இருந்த செயல் நிறைவேறும். உங்களுடைய தேவைகள் நிறைவேறும் நாள். செயலில் இருந்த தடைகள் விலகும். அரசு வழியில் நன்மையை எதிர்பார்க்கலாம்.

**கும்பம்:** பேச்சில் கவனம் தேவை. யாருக்கும் வாக்குறுதி தரவேண்டாம். புதிய முதலீட்டை தவிர்க்கவும். கவனக்குறைவால் இழப்புக்கு ஆளாகலாம். நிதானம் அவசியம்.

**மீனம்:** முக்கிய செயலில் முடிவுக்கு வர முடியாமல் குழப்பமடைவீர்கள். வெளியூர்ப் பயணம் செல்வீர்கள். அலுவலகத்தில் நெருக்கடிக்கு ஆளாக நேரிடும். பணிச்சுமை அதிகரிக்கும்.

### அமெரிக்காவுக்கு பதிலடி

# தாய்வான் அருகே சீனா போர்ப் பயிற்சி




**பீஜிங், மே 27**

**அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தாய்வான் அருகே போர்ப் பயிற்சியை சீனா ஆரம்பித்துள்ளது.**

தீவு நாடான தாய்வானை தங்கள் நாட்டில் ஒரு பகுதி என சீனா கூறி வருகின்றது. அத்துடன் தாய்வானைக் கைப்பற்ற படைபலத்தைப் பயன் படுத்தவும் தயங்கோம் எனவும் சீனா மிரட்டி வருகிறது.

தாய்வானுக்கு ஆதரவாக இருந்து வரும் அமெரிக்கா, தாய்வானுக்கு ஆயுதங்களை வழங்கி வருகிறது. இதனை சீனா தொடர்ந்து கண்டித்து வருகிறது.

ஜப்பானில் அண்மையில் நடைபெற்ற குவாட் மாநாட்டில் தாய்வான் விவகாரம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவிக்கையில்,

தாய்வான் மீது சீனா படையெடுத்தால் அதில் அமெரிக்க இராணுவம் தலையிட்டு தாய்வானைப் பாதுகாக்கும் - என்றார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தாய்வானுக்கு அருகே சீனா போர்ப் பயிற்சியை ஆரம்பித்துள்ளது. (ச-இ)



# நாயாக மாறிய ஜப்பானியர்

டோக்கியோ, மே 27

நாயாக மாற வேண்டும் என்ற ஆசையை 12 லட்சம் ரூபா செலவு செய்து ஜப்பானிய இளைஞர் ஒருவர் நிறைவேற்றியுள்ளார்.

இவர் கோலி இன நாயின் வடிவத்தில் 40 நாள்களில் தயாரிக்கப்பட்ட உடையை அணிந்து 4 கால்களுடன் நடப்பது போன்று தன்னை நாய் போன்று முழுமையாக மாற்றி காணொலி ஒன்றை தனது ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இந்தக் காணொலி தற்போது சமூக வலைத் தளத்தில் ட்ரெண்டாகி வருகின்றது. இதற்குப் பலரும் ஆடை வடிவமைப்பு நன்றாக உள்ளது. நாயைப்போன்றே காணப்படுகிறார் எனப் பதிவுகளை இட்டு வருகின்றனர். (ச-இ)

# பெண்ணை இடித்துக் கொன்ற ஆட்டுக்கு 3 ஆண்டுகள் சிறை



தென்னாபிரிக்காவில் பெண்ணொருவரை மோசமாகத் தாக்கி இடித்துக் கொன்ற ஆடு ஒன்றுக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் ரூம்பேக் கிழக்கு என்ற பகுதியில் ஆடு ஒன்று பெண்ணொருவரை முட்டித் தாக்கி உள்ளது. முதலில் தலையில் தாக்கிய ஆடு பின் அந்தப் பெண்ணின் நெஞ்சில் மாறி மாறி முட்டித் தாக்கியுள்ளது.

இந்த நிலையில் பெண்ணின் நெஞ்சு எலும்புகள் முறிந்து சம்பவ இடத்திலேயே அவர் பலியாகியுள்ளார்.

இதையடுத்து அந்த ஆட்டுக்கு எதிராகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பொலிஸார் அந்த ஆட்டைப் பிடித்து நீதிமன்றில் வழக்குத் தொடுத்தனர்.

வழக்கு விசாரணையில் அந்த ஆடு பெண்ணை இடித்து கொன்றமை உறுதிசெய்யப்பட்டதை அடுத்து அந்த ஆட்டுக்கு 3 ஆண்டு சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சூடான் லேக் மாநில இராணுவச் சிறையில் குறித்த ஆட்டை அடைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)



# ஆப்கானிஸ்தானில் குண்டுவெடிப்புக்கள்

### 14 பேர் உயிரிழப்பு

காபூல், மே 27

ஆப்கானிஸ்தானில் இரு வெவ்வேறு இடங்களில் நடந்த தொடர் குண்டுவெடிப்பில் 14 பேர் பலியாகியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள மசூதி ஒன்றில் நேற்று முன்தினம் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. இதன்போது தொழுகையில் ஈடுபட்ட 5 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் 22 பேர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அதேவேளை நாட்டின் வட பகுதியில் உள்ள மசார் இஷெரீப் என்ற நகரத்தில் பஸ் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர். இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் குறித்து எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# கோதுமை ஏற்றுமதி தடையை மறுபரிசீலனை செய்யுங்கள்

### *சர்வதேச நாணயநிதியம் வேண்டுகோள்*



புதுடில்லி, மே 27

கோதுமையின் ஏற்றுமதி மீதான தடையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என இந்தியாவிடம் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன் மூலம் சர்வதேச உணவுப் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இந்தியா பங்காற்ற முடியும் என்றும் தெரிவித்தார்.

135 கோடி மக்களுக்கு உணவளிக்க வேண்டிய இந்தியா எடுத்த இந்த முடிவை பாராட்டுகிறோம். எனினும் ஏற்றுமதித் தடையை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக நீக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 13 ஆண்டுகளின் பின்னர்

# பயங்கரவாதத் தடுப்பின் கீழ் சிறையிடப்பட்டவர் விடுவிப்பு

கொழும்பு, மே 27

**பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 13 ஆண்டுகளாக சிறைவைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கேதீஸ்வரன் என்ற நபர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.**

மொனராகலை மேல் நீதிமன்றம் வழங்கிய ஆயுட்கால சிறைத் தண்டனைக்கு எதிராக செய்யப்பட்ட மேன்முறையீட்டின் அடிப்படையில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் அவரை விடுதலை செய்து உத்தரவிட்டது.

சுந்தரலிங்கம் கேதீஸ்வரன், காலி பூசா தடுப்பு முகாம் மற்றும் மொனராகலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

மொனராகலை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் தம்மை விடுதலை செய்யுமாறுகோரி, அவர் கூரை மீதேறி போராட்டத்திலும் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தென்மராட்சியில்

# பெற்றோல் விநியோகம்; நீண்டவரிசையில் மக்கள்

சாவகச்சேரி, மே 27

தென்மராட்சி பிரதேச எரிபொருள் நிலையங்களில் நேற்று பெற்றோல் விநியோகம் இடம்பெற்றது.

சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய எரிபொருள் நிலையங்களிலேயே பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஒரு வரிசையிலும் ஓட்டோ, கார் மற்றும் வான் போன்றவை இன்னுமோர் வரிசையிலுமாக ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு வரிசையில் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-9)



# பதவியேற்பு

கொடிகாமம், மே 27

சாவகச்சேரி பிரதேசசபையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சுழற்சி முறையிலான உறுப்பினர் வெற்றிடத்துக்கு கரம்பைக்குறிச்சி மேற்கு வரணியைச் சேர்ந்த இராசேந்திரம் சுதாகர் தெரிவானார். இவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றார். (ச-159)

# ஊடகவியலாளரைத் திட்டமிட்டு பழிவாங்கிய பளை பொலிஸார்

## கிளிநொச்சி ஊடக அமையம் கண்டனம்

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் நவரட்ணம் சதீஸ் என்பவரை பளைப் பொலிஸார் திட்டமிட்டு பழிவாங்கியுள்ளனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையை, கிளிநொச்சி ஊடக அமையம் கண்டித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 20 ஆம் திகதி பளையில் இடம்பெற்ற சமூகவிரோதச் செயற்பாடு தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிவிட்டு, சம்பவ இடத்துக்கு பிரதேச இளைஞர்களுடன் சென்று தடுத்து நிறுத்தியதால், ஊடகவியலாளருக்கு எதிராக பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் முறைப்பாட்டை முறையாக விசாரணை செய்யாது, உள்நோக்கத்துடனும், பழிவாங்கும் எண்ணத்துடன் சட்டத்தைப் பயன்படுத்தி ஊடகவியலாளருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டனர். சமூக அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் ஊடகவியலாளரின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகும் போது, சமூகத்தின் ஏனைய தரப்பினர்களும் அடக்கப்படுகின்ற சூழ்நிலையே உருவாகும். தவறு செய்கின்றவர்கள் மீது சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆனால், பழிவாங்கும் எண்ணங்களுடன் சட்டத்தைப் பயன்படுத்துவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் -என்றுள்ளது. (கு-214)

# விருதுகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்.முத்து விருது மற்றும் இளைங்கலைஞர் விருது ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் யாழ்.மாவட்டச் செயலரால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அந்தந்தப் பிரதேசசெயலகங்களில் பெற்று எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் கலைஞர்கள் பிரதேச கலாசார அலுவலருடன் தொடர்புகொண்டு படிவத்தை பூர்த்தி செய்து அனுப்பிவைக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

# நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற முன்னாள் நூலகர் அமரர் ரோகிணி பரராஜசிங்கத்தின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் நினைவுரையாற்றவுள்ளனர். (ச)

# தவணையிடப்பட்ட திகதியில் மாற்றம்

சாவகச்சேரி, மே 27

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் கடந்த இரண்டாம் திகதி அழைக்கப்படும் என அறிவிக்கப்பட்ட வழக்குகள் மற்றுமொரு திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி எதிர்வரும் ஜூன் மாதம் 13ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளன.

கடந்த இரண்டாம் திகதி பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டதையடுத்தே அன்றைய தினம் நடைபெறவிருந்த வழக்குகள் தவணையிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

# சாரதி அனுமதிப்பத்திர விசேட பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சைக்கான அனுமதி அட்டையைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகளுக்கான விசேட பரீட்சைகள், எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் முற்பகல் 9.30 மணி, முற்பகல் 11 மணி மற்றும் பிற்பகல் 12.30 மணி என்ற ஒழுங்கில் யாழ்.மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை அனுமதி அட்டையைப் பெற்றுக் கொண்டவர்கள், குறித்த தினங்களில் பரீட்சை அனுமதி அட்டையுடன் அதன் போட்டோபிரதி, தேசிய அடையாள அட்டை, மருத்துவச்சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகைதந்து பரீட்சைக்குத் தோற்றுமாறு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச)

# மாட்டுடன் விபத்து; ஒருவர் படுகாயம்

முல்லைத்தீவு, மே 27

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடுப் பகுதியில் மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவுவேளை இடம்பெற்றுள்ளது.

புன்னைநீராவியைச் சேர்ந்தவரே இந்த விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்தவர் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பிரச்சினைகளே அனைத்துக்கும் காரணம்!

## சஜித் வெளிப்படைப்பேச்சு

**கொழும்பு, மே 27**

**இந்த நாட்டில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூலகாரணமாக தீர்க்கப்படாத அரசியல் பிரச்சினைகளே உள்ளன. அவற்றைத் தீர்ப்பதற்கு நாம் முன்வர வேண்டும் என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் வெற்றிகரமான பொருளாதாரப்பயணத்தை நடைமுறைப்படுத்தும் பொருளாதாரக் குழுவுடன் இணைந்து பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான பயனுள்ள வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் திறன் எங்களிடம் (ஐக்கிய மக்கள் சக்தியிடம்) உள்ளது. நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் நேரடியான தீர்வுகளை நடைமுறைப்படுத்த தயாராக உள்ளோம். எங்களிடம் அதற்கேற்ற திறமையான மற்றும் தகைமையுள்ள குழு உள்ளது.
பொருளாதார மறுமலர்ச்சியை நடைமுறைப்படுத்துவதுடன், இந்த நாட்டின் பிரச்சினைகளுக்கு மூல காரணமாக இருக்கும் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் நாம் நடைமுறைப்படுத்தவேண்டும். எனவே, அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்த நாட்டில் பொருளாதார சீர்திருத்தத்துக்கான அணுகல் எமக்குத் தேவையாகவுள்ளது. மக்கள் அபிப்பிராயத்தின் பிரகாரம் போராட்டத்துக்கு துரோகம் செய்யாமல் அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கிய வண்ணம் சிறந்த கொள்கைகளைக் கடைப்பிடித்து, ஜனநாயகத்தைப் பாதுகாத்து, இந்நாட்டு மக்களின் வாழ்வுரிமையை, அடிப்படை மனித உரிமைகளை, பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை நிறைவேற்ற நாம் தயாராக உள்ளோம் - என்றார். (ம)

# கோத்தாபயவின் பதவியை காப்பாற்றுகின்றார் ரணில்!

## கஜேந்திரகுமார் சாட்டை

யாழ்ப்பாணம், மே 27
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகுவதற்கான அனைத்து வாய்ப்புக்களும் உருவாகி வந்த நிலையில், அவரைக் காப்பாற்றும் நடவடிக்கையில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபடுகின்றமை கண்டிக்கத்தக்கது - என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ரணில் விக்கிரமசிங்க ஒட்சிசன் கொடுத்து கோத்தாபயவைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றார்.
அது மட்டுமல்லாது எந்தவித வெட்கமும் இல்லாமல் புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் உதவிகளை வழங்கக்கோரியும் முதலீடுகளைச் செய்யக்கோரியும் அழைப்பு விடுக்கின்றனர். இந்த அரசாங்கத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்களினுடைய உதவிகளை இன்று நாடியிருப்பதன் மூலம் மிகவும் கேவலமான நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பது வெளிப்பட்டுள்ளது - என்றார். (ம-20)

# சிறையிலுள்ள தமிழர்களை விடுதலை செய்யுங்கள்

## ஸ்டாலினிடம் கோரிக்கை

கொழும்பு, மே 27
இலங்கையிலிருந்து இந்தியா சென்று பல காரணங்களால் கைது செய்யப்பட்டு சிறைப்பிடிக்கப்பட்ட ஈழத்தமிழர்களை விடுதலை செய்யுமாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பலதரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்தியச் சிறையில் உள்ள ஈழத்தமிழர்கள் தங்களை விடுதலை செய்யுமாறு கோரி நேற்றுமுன்தினம் ஆறாவது நாளாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
இந்த நிலையிலேயே அவர்களை விடுதலை செய்யுமாறு பலதரப்பினர் தமிழக முதலமைச்சருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.
இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் குறைக்க தாங்கள் பல கோடி மதிப்புள்ள உணவுப்பொருள்களையும் மருந்துப்பொருள்களையும் அனுப்பிவைத்தீர்கள். நாங்கள் இங்கு உங்களுக்கு அருகிலேயே உணவைத் தவிர்த்து எங்கள் வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம்.
எங்களையும் ஒருமுறை கண்ணெடுத்துப் பார்த்து எங்கள் விடுதலைக்காக உதவி செய்யுங்கள் -என்று சிறையில் உள்ளவர்கள் தெரிவித்தனர். (ஒ-14-20)

# இலங்கை-இந்திய மீனவர் விவகாரம் டக்ளஸால் மட்டும் கையாள முடியாது

## எம்.பி.க்களும் அழுத்தம் கொடுக்க வேண்டுமென மீனவர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 27
இலங்கை - இந்திய மீனவர்களிடையே நீண்டகாலமாக நிலவும் இழுவைமடித் தொழில் பிரச்சினைக்கு, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் மட்டும் தீர்மானங்களை நிறைவேற்ற முடியாது. யாழ்.மாவட்டத்தின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து அவருடைய அமைச்சுக்கும், அவருக்கும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இது தொடர்பில் யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னராசா தெரிவிக்கையில்,
இலங்கைக்கு அண்மையில் வருகை தந்திருந்த பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் கு.அண்ணாமலை மீனவர்கள் விவகாரம் தொடர்பிலும் கலந்துரையாடினர்.
நாடு திரும்பிய அவர் கச்சதீவை இந்தியாவுக்குப் பெற்றுக் கொடுத்தால் இந்திய - இலங்கை மீனவர்களுக்கிடையிலான பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று தெரிவித்திருந்தார். இதற்கு அமைச்சர் மட்டுமே பதிலளித்துள்ளார். இந்த விடயத்தில் இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்தவேண்டும் -என்றார். (க-125)

# பரீட்சைக் கடமையில் ஈடுபடுவோருக்கு கொடுப்பனவு அதிகரிக்கப்படவேண்டும்

கொழும்பு, மே 27
க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை நடைபெற்றுவரும் நிலையில் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு, உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், எரிபொருள் விலையேற்றம் பெருமளவில் சுமையை ஏற்படுத்தியுள்ளது. எனவே கடமையில் ஈடுபடுவோருக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ள கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும். இதேவேளை, பரீட்சை நிறைவுறும் வரையில் எரிபொருள் விலையை அதிகரிக்காது, பரீட்சார்த்திகள் மற்றும் பரீட்சைக்கடமைகளில் ஈடுபடுவோருக்கு எரிபொருள் தடையின்றிக் கிடைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் -என்றார். (ஒ-14-இ)

# மத்திய வங்கியின் ஆளுநராக பொறுப்பேற்கப் போவதில்லை!

## இந்திரஜித் குமாரசுவாமி தெரிவிப்பு

கொழும்பு, மே 27
மத்திய வங்கியின் ஆளுநராக மீண்டும் பதவியேற்கும் எண்ணம் தனக்கு இல்லை என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இந்த இக்கட்டான நேரத்தில் மத்திய வங்கியின் ஆளுநராக முக்கிய பங்காற்றி வருகின்றார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
நிதி அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ள நிலையில் மத்திய வங்கி ஆளுநரில் மாற்றம் ஏற்படலாம் எனத் தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.
இதன்படி, தற்போதைய மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவுக்கு பதிலாக இந்திரஜித் குமாரசுவாமி நியமிக்கப்படுவார் எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# முன்னணியின் உருவாக்கத்துக்கும் மணிவண்ணனுக்கும் தொடர்பில்லை

## சுகாஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 27
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உருவாக்கத்துக்கும் மணிவண்ணனுக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது. கட்சி உருவாக்கப்பட்ட பின்னர் ஒரு வேட்பாளராக சிலரால் கொண்டுவரப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒருவரே மணிவண்ணன் என அந்தக் கட்சியின் ஊடகப்பேச்சாளரும் சட்டத்தரணியுமான கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மணிவண்ணனுடைய கருத்தைப் பெரிதாக நாங்கள் கண்டுகொள்ளத் தேவையில்லை. அவர்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணியை விட்டு நீக்கிய முடிவு சரியானது என்பதை அனைவருமே வெளிப்படையாக கூறத் தொடங்கியுள்ளனர். தமிழினப் படுகொலையைச் செய்யப் பங்காளிகளாக இருந்த ஈ.பி.டி.பி.யுடன் இணைந்து மாநகர சபையில் ஆட்சி அமைத்தமை மட்டுமல்லாமல், தங்களுடைய பதவிக்காக டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவோடு இணைந்து செயற்படுவதால் இவர்கள் யார் என்று தெரிந்துவிட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை அவர் உருவாக்கியதாக கூறுவது அப்பட்டமான பொய். கட்சியின் உருவாக்கத்துக்கும் மணிவண்ணனுக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது -என்றார். (ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வல்லை மதுபானசாலை கொலை முதன்மைச் சந்தேகநபர் சரண்!

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி வல்லையிலுள்ள மதுபான விடுதியில் இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய நால்வரில் மூவர் ஏற்கனவே நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் சுமார் 24 நாள்களின் பின்னர் முதன்மை சந்தேக நபர் தனது சட்டத்தரணி ஊடாக நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

கடந்த மே 2ஆம் திகதி இரவு விடுதியில் மதுபானம் அருந்திய இரண்டு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் போத்தலால் குத்தப்பட்டு உயிரிழந்தார். சம்பவத்தில் திக்கம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ஞானசேகரம் குணசோதி (வயது25) என்பவரே கொலை செய்யப்பட்டார்.

சம்பவத்தையடுத்து போத்தலால் குத்தியவர் உள்ளிட்ட நால்வர் தலைமறைவாகிய நிலையில் நெல்லியடிப் பொலிஸார் தேடி வந்தனர். அவர்களில் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த 25 வயதுடைய சந்தேக நபர் வீட்டில் வைத்து சம்பவம் நடந்து இரண்டு தினங்களின் பின்னர் கைது செய்யப்பட்டார்.

குடத்தனை மேற்கைச் சேர்ந்த 31 வயதுடைய சந்தேக நபர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். மற்றையவரும் சில தினங்களின் பின்னர் சரணடைந்தார். சந்தேக நபர்கள் மூவரும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் முதன்மை சந்தேக நபர் 24 நாள்களின் பின்னர் தனது சட்டத்தரணி ஊடாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்றுச் சரண்டைந்தார். சந்தேகநபர் சார்பாக மூத்த சட்டத்தரணி என்.சிறீகாந்தா மற்றும் சட்டத்தரணி ந.சுஜீவன் ஆகியோர் முன்னிலையாகினர்.

சரணடைந்த சந்தேக நபர் கத்தியால் குத்துவதாக வாக்குமூலங்கள் மற்றும் பாதுகாப்புக் கமராக் காட்சி உள்ளதால் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரிக்க நெல்லியடி பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர். பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு ஆட்சேபனையை முன்வைத்து மூத்த சட்டத்தரணி என்.சிறீகாந்தா நீண்ட சமர்ப்பணத்தை செய்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான், பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரித்துச் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன் அடையாள அணிவகுப்புக்கும் கட்டளையிட்டார். (எ-26)

*திரைப்படப்பாணியில்*

# விபத்தில் மாணவனை காப்பாற்றிய நாய்

கொழும்பு,மே 27



திரைப்படப்பாணியில் ரயில் விபத்தில் சிக்கவிருந்த மாணவனை, தெருநாயொன்று பாய்ந்து காப்பாற்றியுள்ளது. இந்த நெகிழ்ச்சிச் சம்பவம் குருநாகலில் நடந்துள்ளது. ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள ரயில் கடவையை மாணவன் கடக்க முயன்றபோது, பொல்கஹவெலவில் இருந்து வந்த ரயில் குறுக்கு வீதியை அண்மித்துள்ளது. இதன்போது மாணவன் ரயிலுடன் மோதப்போகிறார் என அங்கிருந்த மக்கள் கத்திக் கூச்சலிட்டபோதிலும் ரயில் சத்தம் காரணமாக அவருக்குக் கேட்கவில்லை. இதன்போது ரயில் நிலையத்துக்கு அருகில் இருந்த தெரு நாய் ஒன்று அவ்விடத்துக்கு ஓடிவந்து மாணவன் மீது பாய்ந்துள்ளது. இதன் போது நிலைமையை உணர்ந்த மாணவன், ரயில் கடவையை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார். ஒரு நொடி தாமதமாகியிருந்தால் மாணவனும், நாயும் ரயிலில் மோதுண்டு உயிரிழந்திருக்கக்கூடும் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதும் குறித்த மாணவன், எரிபொருள் பிரச்சினையால் வாகனமின்றி, ரயில் வீதியில் பயணித்து பரீட்சை மண்டபத்தைச் சென்றடையத் திட்டமிட்டிருந்தார் எனத் தெரியவந்துள்ளது. (க-இ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. மாசிலாமணி சுகந்தன்

உரிமையாளர்

( KMAS Engineering Contractors )

Congratulations

நேற்றைய தினம் (26.05.2022) வியாழக்கிழமை மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவா[illegible] செய்து கொண்டமையை பெருமையுடன் பாராட்டி வாழ்த்[illegible]

வாழ்த்துவோர்: குடும்பத்தினர்,

## A/L 2024 - பௌதீகவியல்

(ஆங்கில, தமிழ் மூலம்)

2024 A/L மாணவர்களுக்கு முழுமையான பாடத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் பூர்த்தியாக்கப்படும். மாணவர்களைப் பெற்றோர்கள் தயக்கமின்றி இணைத்துக் கொள்ளலாம்.

பெருமாள், கோவில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

077 618 3064

## மஹோற்சவ கால கடைகள் ஏலம்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்
மஹோற்சவகாலக் கடைகள் ஏலம் கூறல்

வரும் (29.05.2022)
ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 10.00 மணிக்கு ஆலய
முன்றலில் இடம்பெறவுள்ளது.

தர்மகர்த்தாக்கள் சபை,
அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்.

(CS 1007) (2.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. மாசிலாமணி சுகந்தன்



எமது நிறுவனத்தின் இயக்குனர் திரு.மாசிலாமணி சுகந்தன் 26.05.2022 அன்று யாழ்.மேல் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவரை இவரது நிறுவனம் சார்ந்த பணியும் மற்றும் சமூகப் பணியும் மேன் மேலும் சிறந்து வளர வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
KMAS Engineering Contractors
பணியாளர்கள்

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 08 . 1961



மறைவு 26 . 05 . 2022

## கணபதிப்பிள்ளை பழனித்துரை
(பழனி)

திருநெல்வேலி கெனடிலேனை பிறப்பிடமாகவும், நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பழனித்துரை நேற்று (26.05.2022) வியாழக்கிழமை நெதர்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் இளைய புதலவனும் காலஞ்சென்றவர்களான துரைராஜா பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் காஞ்சனாதேவியின் (பேபி) அன்புக் கணவரும் கவிதாரணியின் அன்புத்தந்தையாரும் சுப்பிரமணியம் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் முருகானந்தம், சிவரஞ்சன், அதிசயராஜன் ஆகியோரின் மாமனாரும் பிரசாந்தின் சித்தப்பாவும் மற்றும் V.T. ராஜேந்திரா, நீலா, உமாதேவி, லங்காதேவி, சுரேந்திரன், நிரஞ்சனாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்திரவனம்
அம்மன் வீதி, திருநெல்வேலி.

தகவல்:
V.T. ராஜேந்திரன் (மைத்துனர்)
077 309 6882, 077 228 6923, 077 401 5621


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 17 • 03 • 1955

மறைவு 27 • 04 • 2022



கடந்த (27.04.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத்தலைவர்

## அமரர் சண்முகம் சிங்கரட்ணம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்
இன்று (27.05.2022) வெள்ளிக்கிழமை
நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற
இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை
தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

23/16, முதலியார் வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.
021 222 9030

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs.44853) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபாலை-கோப்பாய் கற்பகப் பிள்ளையாருக்கு இன்று தீர்த்தோற்சவம்

யாழ்ப்பாணம், மே 27

கோப்பாய், கற்பகப்பிள்ளையார் தீர்த் தோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி , காலை 830 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் அதனைத் தொடர்ந்து 930 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

மாலை 5மணிக்கு வசந்தமண்டப பூஜை, கொடியிறக்கம் , சண்டேஸ்வரர் உற்சவம், ஆசார்ய உற்சவம் என்பன இடம்பெறவுள்ளன. (எ)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் கௌரியாம்பாள் இரவீந்திரன்

மலர்வு 29.04.1954

உதிர்வு 29.04.2022

சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் 31ம் நாள் நினைவு தினமும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் நாளை (28.05.2022) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொள்ள உற்றார், உறவினர், அயலவர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சோனெழு,
கோப்பாய் மத்தி, கோப்பாய்

குடும்பத்தினர்



# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல் - 2022
## குளுமாட்டுச்சந்தி கடைத்தொகுதி - 2022

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த குளுமாட்டுச் சந்தி கடைத்தொகுதியினை 2022ஆம் ஆண்டு ஆனி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விகள் 2022.06.07ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2022.06.07ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி **தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா"** என்ற முகவரிக்கும், ஒரு பிரதி **"பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா"** என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2022.06.07ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக்கப்படும்.

விண்ணப்பதாரர் இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடை யாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாக சமூகமளித்து பெற்றுக்கொள்ளலாம். கேள்வி தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் வழங்கப்படும்.

| கடை விபரம் | மாதவாடகை | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|
| மீன் கடை 01 | 2000.00 | 1,000.00 |
| மீன் கடை 02 | 2000.00 | 1,000.00 |
| மீன் கடை 03 | 2000.00 | 1,000.00 |
| மீன் கடை 04 | 2000.00 | 1,000.00 |
| மீன் கடை 05 | 1500.00 | 1,000.00 |
| மீன் கடை 06 | 1500.00 | 1000.00 |
| மீன்கடை 07 | 1500.00 | 1000.00 |
| மீன் கடை 08 | 1500.00 | 1000.00 |
| கடை 09 | 2000.00 | 1000.00 |

**திரு.தர்மலிங்கம் யோகராஜா,**
**தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**
**26.05.2022**

(cr.36020) (2.6)



# நினைவஞ்சலிகள்

35ஆம் ஆண்டு



23ஆம் ஆண்டு



17ஆம் ஆண்டு



அ. முத்துராசா  மு. பொன்னம்பலம்  பொ.இராசமணி

வடமராட்சியின் அனர்த்தத்தில் உம் இன்னுயிர் கவர்ந்த கூற்றுவன். உம்மை மட்டுமல்ல இன்னோரன்ன பல உயிர்களை பலி எடுத்தமையினை எம்மால் மறக்க முடியவில்லையே உம்முடன் சேர்ந்து சகல ஆத்மாக்களும் சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**"முத்துவாசா"**
**கெருடாவில், தொண்டைமானாறு.**

(cr.36021) (2.6)

குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 05 . 1954



மறைவு 26 . 05 . 2022

## திரு.பழனிவேல் சுப்பிரமணியம்

குருநாகலைப் பிறப்பிடமாகவும், வவுனியா பாரதிபுரத்தை நிரந்தர வசிப்பிட மாகவும், பொன்னையா வீதி, ஆறுகால்மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பழனிவேல் சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (26.05.2022) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனிவேல் இராமாய் தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான பெரியசாமி சாலாட்சி தம்பதியரின் அன்பு மரு மகனும், மாரியாய் அவர்களின் அன்புக் கணவரும், அங்கம்மா, அமரர் மாரி முத்து, ஆனந்தஜோதி ஆகியோரின் சகோதரரும், கணேஷ்குமார், கண்ணகியம்மாள் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நடராஜா, சந்திரகலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சதுர்த்திகாஹரிணி, தனுர்த்திகா ஹரிணி, மிதுர்த்திகா, லக்ஷிதாஹரிணி, சன்சிகா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**42/2, சீரடி லேன்,**
**பொன்னையா வீதி,**
**ஆறுகால்மடம்.**

தகவல்:
குடும்பத்தினர்
மகன்-077 5768 041



# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 08 . 01 . 1936



மறைவு 29 . 04 . 2022

## அமரர் சந்திரசேகரர் கணபதிப்பிள்ளை (K.S.K)

(ஓய்வுநிலை உத்தியோகத்தர்- சுகாதாரத் திணைக்களம்,
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் - உப தலைவர்
கைதடி கிழக்கு சனசமூக நிலைய-போசகர்)

அன்புடையீர்!

எங்கள் குடும்பத்தலைவர் கடந்த (29.04.2022) வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் இறைவனடி சேர்ந்த செய்தியை அறிந்து எங்களின் துயரில் கலந்து கொண்டு, எமக்கு ஆறுதல் அளித்து சகலவழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் நேரில் கலந்துகொள்ள முடியாத நிலையில் நவீன தொடர்புசாதனங்கள் மூலமாகவும் ,தாங்கள் துயரைப்பகிர்ந்து கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்களிற்கும் நன்றிகளைத் தெரி விப்பதுடன் நாளை (28.05.2022) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் குடும்பசகிதம் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடனும் நன்றியுடனும் அழைக்கின்றோம்.

**குறிப்பு:** இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

"[illegible]"
கைதடி கிழக்கு, கைதடி.
27.05.2022

நன்றி
077 746 4889
077 051 4632

அன்புடன்
குடும்பத்தினர்.

(cr.10101) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச...

நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வங்கிகளின் தலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பிலேயே இலங்கை மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, உலகளாவிய நெருக்கடியில் சுமார் 70 நாடுகள் சிரமங்களை எதிர்கொள்கின்றன என்றும், அவற்றில் இலங்கை முதலிடத்தில் உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் எதிர்காலத்தில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிள்ளது என்று தெரிவித்த பிரதமர், நாடு எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரக் கொள்கை முடிவுகளை எடுக்க வேண்டியது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்துடன், இணைய வழியில் நடத்திய பேச்சுக்கள் நிறைவடைந்துள்ளன. சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் இலங்கை அதிகாரிகளுடனான நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தப் பேச்சுக்கள் ஊடாக இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு உறுதியான தீர்வைக் காண்பதற்கு முயற்சிக்கப்படும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் அதன் கொள்கைகளுக்கு உட்பட்டு உதவிகளை வழங்க எப்போதும் தயாராக இருக்கின்றது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-எ-இ)

## எரிபொருள்...

'இது தொடர்பில் பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்கள் அதற்கான பொறிமுறையைத் தயாரிக்கின்றனர். விரைவில் எரிபொருள் விநியோகத்துக்கு தனியாகப் பங்கீட்டு அட்டை வழங்கப்படும்' என்று அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-5)

## கச்சதீவை...

பெற இந்தியா திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் வெளிவந்திருந்த நிலையில் தமிழக முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்தில் நேற்றுக் கலந்துகொண்ட நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று தெரிவித்தார்.

இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் கரிசனையுடன் செயற்படுகின்றோம் என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று மாலை தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் "இலங்கை தனது கடுமையான நாள்களைக் கடந்து வருகின்றது. அதன் நிலைமைகள் தொடர்பாக உங்களுக்கும் கரிசனை இருக்கும்.

நெருங்கிய நட்பு மற்றும் அண்டை நாடு என்ற அடிப்படையில் இந்தியா- இலங்கைக்கு கூடுமான ஒத்துழைப்புக்கள் அனைத்தையும் வழங்குகின்றது" என்று தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## அரச...

ஊழியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் இந்த தீர்மானத்தை பிரதமர் எடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது. 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தால் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டது. தற்போது வாழ்க்கைச் செலவு அதிகரிக்கப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டு, அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்று, வரவு- செலவுத் திட்டத்தை தயாரிக்கும் குழுவுக்குப் பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதேவேளை, அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு ஏற்றவாறு, தனியார் துறையினரது சம்பளத்தை அதிகரிக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று, வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் குழுவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## விபத்தில்...

ணித்த இருவர் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாலம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர். விபத்தில் சிக்கிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் முழங்காவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக ஒருவர் கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். விபத்தில் காயமடைந்த மற்றையவர் முழங்காவில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக இலுப்பைக்கடவைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-113)

## பதவி...

மே 31ஆம் திகதியுடன் இராணுவத் தளபதி என்ற பதவியில் இருந்து விலகும் அவர் ஜூன் மாதம் முதலாம் திகதி பாதுகாப்புப் படைகளின் புதிய பிரதானியாக கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். அதேநேரம், மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே, எதிர்வரும் முதலாம் திகதி, புதிய இராணுவத் தளபதியாக பதவியேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ம)

## 33 ஆயிரம்...

வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

'இரு வாரங்களுக்குப் பின்னர் யாழ். மாவட்டத்துக்கு இப்போதே மண்ணெண்ணெய் கிடைத்துள்ளது. ஆயினும் மிகக் குறைந்த அளவே கிடைத்துள்ளது. எனவே இதனை முன்னுரிமை அடிப்படையில் மீ[illegible]ளோம். அது [illegible] கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் எமக்கு வழங்கும். அதற்கு அமைவாக விநியோகம் முன்னெடுக்கப்படும். அதேவேளை விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கும் மண்ணெண்ணெயை வழங்க முயற்சித்து வருகின்றோம்' - என்றார். (அ-ஒ-5)

## இன்று முதல்....

திகதி முதல் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

தற்போது மசகு எண்ணெய் தொகை ஒன்று இறக்குமதி செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் ஆறு தினங்களுக்குள் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து முதல் தொகுதி எரிபொருளைச் சந்தைக்கு வழங்க முடியும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (எ-இ)

## யாழில்...

வெளியான தகவலை யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் மறுத்துள்ளார். தேவையேற்படின் பொலிஸ் பாதுகாப்பு நாடப்படலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக எரிவாயு விநியோகத்தில் குளறுபடிகள் நிலவுகின்றன. இதனைத் தடுப்பதற்கு மாவட்டச் செயலகம் ஊடாக பொறிமுறை நிறுவப்பட்டு வருகின்றது. அதற்கு எரிவாயு விநியோக முகவர் ஒத்துழைக்காவிடின் மாவட்டச் செயலகம், இராணுவப் பாதுகாப்புடன் அதனை முன்னெடுக்கும் என்று இணையத்தளங்களில் நேற்று செய்தி வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் மாவட்டச் செயலரைக் கேட்டபோது, இராணுவப் பாதுகாப்பு பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை எதுவும் இல்லை. கடந்த சில தினங்களாக எரிவாயு விநியோகத்தின்போது பாதுகாப்பை எரிவாயு விநியோக நிறுவனம் கோரியிருந்தது. அதற்கு அமைவாக பொலிஸ் பாதுகாப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டது. எதிர்காலத்திலும் தேவைப்படின் பொலிஸ் பாதுகாப்பு பெறப்படும்-என்றார். (அ-ஒ-5-26)

## நேற்று...

விநியோகிக்கப்படவுள்ளது. இதனால் இன்றுடன் யாழ்.குடாநாட்டில் பெற்றோல் விநியோகம் சீராகிவிடும் என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வாரங்களாக பெற்றோல் மற்றும் டீசல் உட்பட எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. மக்கள் எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசைகளில் பலமணி நேரமாகக் காத்திருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

தற்போது இந்த நிலைமை சற்றுச் சீரடைந்துள்ளது. எரிபொருள் நிலையங்களுக்கு விநியோகம் சீராக மேற்கொள்ளப்படுவதால் அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் மக்களுக்கு பெற்றோல் விநியோகிக்கப்படுகின்றது. அதனால் வரிசையில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிராது என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-17)

## சுகாதாரப்...

கவனயீர்ப்பு போராட்டம் ஒத்திவைக்கப்பட்[illegible] அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும் ஊடகக் குழு உறுப்பினருமான மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதார அமைச்சின் நிதி முகாமைத்துவப் பணிப்பாளர், சுகாதார ஊழியர்கள், மருத்துவர்களுடைய கொடுப்பனவுகளை வெட்டும்படி பணித்திருக்கின்றார். இவ்வாறு கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டமை தொடர்பில் கலந்துரையாடல் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கும் நிதி அமைச்சினுடைய செயலாளருக்கும் மற்றும் உயர் அதிகாரிகளுக்குமிடையே இடம்பெற்றது.

எந்தவொரு அடிப்படையிலும் அரச ஊழியர்களுடைய சம்பளம் குறைக்கப்பட வேண்டும் என்றோ அல்லது சுகாதார ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்பட வேண்டும் என்றோ அல்லது மருத்துவர்களுடைய கொடுப்பனவுகள் குறைக்கப்பட வேண்டும் என்றோ எந்த அறிவித்தலும் வழங்கப்படவில்லை. ஆனால், இந்தப் பொருளாதார நெருக்கடியை மிகவும் வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றே அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக சுகாதார அமைச்சில் இருக்கின்ற பிரதான நிதி அதிகாரியின் தன்னிச்சையான அதிகார முடிவுகளின் அடிப்படையிலேயே கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

இதனால் மருத்துவர்கள், சுகாதார ஊழியர்கள் பலர் அசௌகரியத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவுகள் யாவும் முன்னர் போல வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சின் செயலர் நேற்றைய சந்திப்பில் எமக்கு உறுதியளித்தார்.

அத்தோடு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தோடு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கும் இடம்பெற்ற சந்திப்பிலும் எந்தவொரு காரணத்துக்காகவும் சுகாதார ஊழியர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட கொடுப்பனவுகள் குறைக்கப்பட மாட்டாது என்றும் சுகாதாரத்துறையை தொடர்ச்சியாகவும் வினைத்திறனாகவும் நடத்திச்செல்ல உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார். தற்போது குறைக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகள் யாவும் மீள கையளிக்கப்படும் என்ற உறுதியையும் சுகாதார அமைச்சர் வழங்கினார். குறைந்தது இன்னும் ஒரு வார காலத்துக்குள் இந்த நடவடிக்கைகள் யாவும் மேற்கொள்ளப்படும் என்றும் இனிவரும் காலங்களில் எந்தவொரு காரணத்தைக் காட்டியும் சுகாதார ஊழியர்களின் மருத்துவர்களின் கொடுப்பனவுகள் குறைக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்தார்.

இதனைக் கருத்திற்கொண்டு அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் தற்போது முன்மொழியப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கையை ஒருவார காலத்துக்குப் பிற்போடப்பட்டது. தற்போது குறைக்கப்பட்ட கொடுப்பனவை ஒரு வார காலத்துக்குள் மீள வழங்காவிட்டால் ஒத்திவைக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கையை ஒரு வார காலத்துக்குப் பின்னர் மீள முன்னெடுப்போம்- என்றார்.

(அ-ஒ-5-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்சார்பு பொருளாதாரமே தற்போதுள்ள ஒரே தெரிவு

## சாவகச்சேரி பிரதேசசபையின் தவிசாளர் க.வாமதேவன் தெரிவிப்பு

**கொடிகாமம், மே 27**

**நாடு வரலாறு காணாத நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள நிலையில், ஒவ்வொரு வீடுகளிலும் கடைப்பிடிக்கப்படும் தற்சார்புப் பொருளாதாரமே நாட்டையும் ஒவ்வொரு வீட்டையும் மீட்பதற்கான ஒரேவழி என்று தெரிவித்தார் சாவகச்சேரி பிரதேசசபையின் தவிசாளர் க.வாமதேவன்.**

சாவகச்சேரி பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்று சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் தலைமையுரை ஆற்றும்போதே தவிசாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைமைகளைப்பற்றிப் பேசாமல் அடுத்த நடவடிக்கைகளுக்குச் செல்ல முடியாத சூழலில் இருக்கின்றோம். உள்ளூராட்சிசபைகளை கலைத்துவிடலாம் என்ற எண்ணத்துக்கு அரசாங்கம் செல்லும் அளவுக்கு நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது. இதற்கான தீர்வு என்ன? பஞ்சம் வரும் என்று எதிர்வுகூறுவதற்காக தலைவர்கள் நாட்டில் இருக்கின்றார்கள்.

இதற்கான தீர்வு என்ன? நாம் எமது சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டும். அதன்மூலமே கொஞ்சமேனும் நாம் ஆறுதலடையமுடியும்.

உரம் தடை செய்யப்பட்டபோது அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள்தான் வீதிக்கு இறங்கிப் போராடினார்கள். அந்தநேரம் சகலரும் வேடிக்கை பார்த்தார்கள். இன்று எல்லோரையும் பொருளாதாரம் பாதிக்கின்ற பொழுது பலர் பலவிதமான போராட்டங்களை முன்னெடுக்கின்றார்கள். அரச உத்தியோகத்தர்கள் இன்னும் பேசாமல் இருக்கிறார்கள். யாரும் இதைப்பற்றி சிந்திக்கவில்லை. ஆனால், எப்போது அவர்கள் வீதிக்கு இறங்குவார்கள் என்றால், அடுத்த மாதச் சம்பளம் நிறுத்தப்படுகின்றபோதுதான். ஆனால், அப்போது அவர்களுக்காகப் போராடுவதற்கு எவர்தான் மிச்சமிருப்பார்கள் ?- என்றார்.

(ம-159)

# சாவகச்சேரி பகுதிகளில் விலங்கு நோய்த் தடுப்பு

சாவகச்சேரி, மே 27

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் வட்டார ரீதியாக நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தடுப்பூசி வழங்குவது தொடர்பான அறிவித்தல் வாகனத்தில் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படும் எனவும் அறிவிக்கப்படும் நிலையங்களுக்கு தமது வளர்ப்பு நாய்களைக் கூட்டிச் சென்று தடுப்பூசியைப் பெறுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

(ச-9)

# நினைவேந்தலும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், மே 27

நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் 18 ஆவது நினைவேந்தலும் "நடேசனின் ஊடகத்துறை பயணம்" என்ற நூல் வெளியீடும் நாளை மறுதினம் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாண நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.ஊடக அமையத் தலைவர் ஆ.சபேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் நினைவுப்பேருரையை யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கோசலை மதன் நிகழ்த்தவுள்ளார்.

(ஒ-14)

# உணவுப்பொருள்கள் தட்டுப்பாட்டால் போசாக்குக் குறைபாடு ஏற்படலாம்

## வீட்டுத் தோட்டத்தை மேற்கொள்ள ஆலோசனை

யாழ்ப்பாணம்,மே 27

நாட்டில் உணவுப் பொருள்களின் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு காரணமாக குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மாருக்கு போசாக்குக் குறைபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே மக்கள் தங்களது வாழ்விடங்களில் வீட்டுத்தோட்டச் செய்கையை மேற்கொள்ள வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு விவசாயத் திணைக்களத்தினர் விதைகளையும், நாற்றுக்களையும் வழங்கி வருகின்றனர். எனவே அவற்றைப் பயிரிட்டு, போசாக்கான மரக்கறி உணவுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

கர்ப்பிணிகளுக்குப் போசாக்கின்மை ஏற்பட்டால் சிசுவுக்கும், தாய்க்கும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும். எனவே ஒவ்வொரு குடும்பமும் தமது வாழ்விடங்களில் சிறிய இடங்களிலாவது வீட்டுத்தோட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

(கு-இ)

# பசளை நிறுவனங்களுக்கு ரூ.28,000 மில்லியன் நிலுவை

கொழும்பு,மே 27

சேதன மற்றும் அசேதனப் பசளை நிறு வனங்களுக்கு 28 ஆயிரம் மில்லியன் ரூபா நிலுவை செலுத்த வேண்டியுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சேதனப் பசளை உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன. அவர்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை 5 ஆயிரம் மில்லியன் ரூபாவென தெரியவந்துள்ளது. அதில் 500 மில்லியன் ரூபா நிதியை திறைசேரியுடன் கலந்துரையாடி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நிலுவையும் விரைவில் செலுத்தப்படும். எதிர்காலத்தில் மிகவும் உயர் திறன்கொண்ட சேதனப்பசளை மாத்திரமே விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும். உயர் திறனுடன் சேதனப்பசளையை உற்பத்தி செய்யாத நிறுவனங்களுக்குத் தடை விதிக்கப்படும். அதேவேளை 23 ஆயிரம் மில்லியன் ரூபா நிலுவைப் பணத்தை அசேதனப் பசளை நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியுள்ளது - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(கு-இ)


திருமாங்கல்யம் திருமண சேவை

1985, உள்நாட்டு மணமகன்,1995, உள்நாட்டு மணமகள்,1987, வெளிநாட்டு (பிரான்ஸ்) மணமகன், 1992, உள்நாட்டு மணமகள், இது போன்ற மணமக்கள் எம்மிடம் உள்ளனர்.

thirumaangalyam.com

077 120 4651, 021 728 4433

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக் காணிவிற்பனைக்கு.

- ✓1 1/2, 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் கிழக்கு எல்லைகள்
- ✓சமுர்த்தி வங்கி வடக்கு எல்லை.
- ✓கைதடி சந்தி 200 M தூரம்
- ✓வட மாகாண சபை அலுவலகம் 250 மீற்றர் தூரம்.
- ✓மூன்று வழி பாதையுடன்
  - 01- A-09 வீதி 100 மீற்றர் (16 அடி பாதையுடன்)
  - 02- கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடி பாதையுடன்)
  - 03- சமுர்த்தி வங்கி அருகாமை 100 M தூரம் (16 அடி பாதையுடன்)
- ✓சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
- ✓செம்மண் காணி.

தொடர்பு: 077 6234 204 077 2880 152 076 6583 621

(CS 1014) 1/6

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு

நிலப்பரப்பு

- ❖ A 32, A9 இணையும் பிரதான வீதியில் (ரவுண்டப் வோட்)
- ❖ A9 வீதியுடன் 6 பரப்பும்.
- ❖ A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ❖ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ❖ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும்
- ❖ மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
- ❖ அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389, 077 241 7589


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.